835

மாணவர் உயர்தர

# இலக்கணம்

முதற்பாகம்

(நான்காம் பாரத்துக் குரியது)

தூத்துக்குடி கால்ட்வெல் ஹைஸ்கூல்
தமிழ்ப் பண்டிதர்
திரு. J. G. சுந்தரம் அவர்கள்
இயற்றியது

*(Approved by the Text Book Committee)*

THE TEACHERS' PUBLISHING HOUSE,
EDUCATIONAL PUBLISHERS,
MADRAS.
1931 [*Price As 6.*

TB
P31 A)
N31
170495

மாணவர் உயர்தர

# இலக்கணம்

முதற்பாகம்

(நான்காம் பாரத்துக் குரியது)

தூத்துக்குடி கால்ட்வெல் ஹைஸ்கூல்
தமிழ்ப் பண்டிதர்

திரு. J. G. சுந்தரம் அவர்களால்

துரைத்தனத்தார் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைக்கு
நூதனமாக வெளியிட்டுள்ள பாடதிட்டத்தைத்
தழுவி யெழுதப் பெற்றது

பதிப்பாளர் :

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

தம்பு செட்டித் தெரு, சென்னை.

1931

[விலை அணா 6

பதிப்புரிமை]

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எழுத்தியல் ... ... | 1 |
| 2. | சொல்லியல் ... ... | 14 |
| 3. | புணரியல் ... ... | 55 |
| 4. | பொதுவியல் ... ... | 66 |

அனுபந்தம்.

| | |
|---|---|
| நன்னூல் சூத்திரங்கள் ... | 71 |
| பாடதிட்டம் ... ... | 74 |

மாணவர் உயர்தர

# இலக்கணம்

---

## முதற் பாகம்

*அகத்திய முனிவர் அகமலர் பொருந்தி*
*யிகத்தோர்க் கிலக்கண மினிதுரைப் பேனே*

## I எழுத்தியல் (ORTHOGRAPHY)

**1**. சொல்லுக்கு முதற்காரணமாகிய ஒலியே எழுத்தாகும். ஒலிவடிவத்திற்கும் வரிவடிவத்திற்கும் 'எழுத்து' என்பதே பெயர். ஆதியில் ஒலிவடிவத்திற்குப் பெயர் இல்லை. ஒலிவடிவம் வரிவடிவமாக எழுதப்பட்டபோதே 'எழுத்து' என்றபெயர் இரண்டிற்கும் உரித்தாயிற்று. 'எழுத்து' காரணப்பெயர்; எழுதப்படுதலின் 'எழுத்து' என்றாயிற்று.

### எழுத்துக்களின் வகைகள்

**2**. தமிழ் எழுத்துக்களை யெல்லாம் இரு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். அவை 1. முதல் எழுத்துக்கள், 2. சார்பு எழுத்துக்கள்.

### முதலெழுத்துக்கள்

**3**. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ-இப் பன்னிரண்டும் ;

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இப்பதினெட்டும் ;

ஆக இம்முப்பதும் முதல் எழுத்துக்கள் எனப்படும்.

இவை முதற்காரணமாய் நின்று, இதர எடு
பிறப்பித்தலால், முதல் எழுத்துக்கள் ஆயின.

இவற்றுள்,

**4**. 'அ' முதல் 'ஔ' ஈறுயுள்ள 12 எழுத்துக்களும் 'உயிர் எழுத்துக்கள்'.

இவை பிற எழுத்துக்களின் உதவியின்றி, உயிர் போலத் தாமே நடக்கும் திறத்தன, தாமே ஒலிக்கும் ஆ' றல் உடையன வாதலின், உயிரெழுத்துக்கள்.

**5**. 'க்' முதல் 'ன்' ஈறுயுள்ள 18 எழுத்துக்களும் மெய் எழுத்துக்கள்.

இவை தம்மில் ஓசை, உச்சாரணம் உடையன அல்ல. உயிர் எழுத்துக்களோடு சேர்ந்தாலன்றி, இவை தாமே நடவா. உயிரெழுத்துக்களைத் தம்மில் ஏற்று ஒலிக்கும் தன்மையனவாய், உயிர் ஏறுதற்கான உடல் போன்ற இவ் வெழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் ஆயின.

உயிர், மெய் எழுத்துக்களின் உட்பிரிவுகள்

**6**. (i) அ, இ, உ, எ, ஒ—இவ்வைந்தும், இவை சேர்ந்துவரும் பிற எழுத்துக்களும் குற்றெழுத்துக்களாம். இவை, குறுகிய ஓசையுடையனவாதலின் 'குறில்' எனவும் பெயர் பெறும்.

(ii) ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ—இவ்வேழும், இவை ஏறிவரும் பிற எழுத்துக்களும் நெட்டெழுத்துக்களாம். இவை நெடிய ஓசை யுடையனவாதலின் 'நெடில்' எனவும் பெயர் பெறும்.

(iii) அ, இ, உ—இம்மூன்றும் யாதாம் ஒ பொருளையாவது ஆளையாவது சுட்டிக்காட்டும்படி வருவதால் 'சுட்டெழுத்துக்கள்' எனப்படும்.

'அ' தூரத்தில் உள்ளனவற்றையும்,

'இ' சமீபத்தில் உள்ளனவற்றையும்,

'உ' மேல், நடு இடத்தில் உள்ளனவற்றையும் சுட்டும்.

உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| இவன் — | உவன் — | அவன் | எனமுறையே மூவிடத்தும் சுட்டும். |
| இது — | உது — | அது | |
| இம்பர் — | உம்பர் — | அம்பர் | |
| இப்பக்கம் — | உப்பக்கம் — | அப்பக்கம் | |

## மெய்யெழுத்தின் வகைகள்

**7.** (i) க், ச், ட், த், ப், ற்—இவ்வாறும், இவற்றின் வர்க்கங்களும் வல்லெழுத்துக்கள்.

இவை வல்லோசை யுடையன ; ஆதலின், வலி, வல்லினம், வன்கணம் எனவும் பெயர் பெறும்.

(ii) ங், ஞ், ண், ந், ம், ன்—இவ்வாறும், இவற்றின் வர்க்கங்களும் மெல்லெழுத்துக்கள்.

இவை மெல்லோசை யுடையன; ஆதலின், மெலி, மெல்லினம், மென்கணம் எனவும் பெயர் பெறும்.

(iii) ய், ர், ல், வ், ழ், ள்—இவ்வாறும், இவற்றின் வர்க்கங்களும் இடையெழுத்துக்கள்.

இவை வலிய, மெலிய ஓசைகளின்றி, நடுத்தரமான, இடைப்பட்ட ஓசை யுடையன ; ஆதலின், இடை, இடையினம், இடைக்கணம் எனவும் பெயர் பெறும்.

## வினா எழுத்துக்கள்

**8.** எ, யா; ஆ, ஓ; ஏ;—இவ்வைந்தும் வினாப்பொருள்தர வருதலின், வினா எழுத்துக்கள் எனப்படும்.

எ, யா முதலினும்,
ஆ, ஓ ஈற்றினும்,
ஏ இருவழியினும்
} ஓர் சொல்லில் நின்று, வினாப் பொருள் பயக்கும்.

உதாரணம்

| | |
|---|---|
| எவன் ? யாவன் ? எங்ஙனம் ? யாங்ஙனம் ? | எ, யா-சொல்லில் முதற்கண் வந்தன. |
| சிவனா ? இராமனோ ? பிள்ளையா ? கிள்ளையோ ? | ஆ, ஓ-சொல்லில் ஈற்றில் வந்தன. |
| ஏது ? அதையே செய்தான் ? ஏன் ? வாலியே வென்றான் ? | ஏ-முதலிலும் ஈற்றிலும் வந்தது. |

## சார்பெழுத்துக்கள்

**9.** உயிர், மெய் ஆகிய முப்பது முதல் எழுத்துக்களின் சார்பாகப் பிறக்கும் எழுத்துக்கள் யாவும் சார்பெழுத்துக்கள் எனப் பெயர் பெறும்.

சார்பெழுத்துக்களாவன :—

1. உயிர்மெய் எழுத்து
2. ஆய்த எழுத்து
3. குற்றியலுகரம்
4. குற்றியலிகரம்

இவை நான்கும் பிறவுமாம்.

## உயிர்மெய் எழுத்து (சார்பெழுத்து)

**10.** 12 உயிர் எழுத்துக்களும் 18 மெய்யெழுத்துக்களோடும் தனித்தனியே சேர்வதால் பிறக்கும் 216 எழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்களாம். உடல் மேல் உயிர்வந்து கூடிப் பிறக்கும் எழுத்துக்களை உயிர்மெய் எழுத்துக்கள் என்றார். எனவே, அவற்றில் உடல் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நடக்கும்.

**உதாரணம்** { க் + அ = க     த் + இ = தி<br>
ச் + ஆ = சா     ம் + ஈ = மீ

## ஆய்த எழுத்து (சார்பெழுத்து)

**11.** இது உயிர்மெய் போலும் மெய் போலும் ஓசை

கொண்டு, உயிர், மெய் குற்றெழுத்துக்களைச் சார்ந்து வரும். ஒருவகை ஆயுதம் போல் எழுதப்படுதலின் ஆய்த எழுத்து எனப்பட்டது. இதன் வடிவம் ஃ.

உதாரணம்: எஃகு, கஃசு, அஃறிணை, பஃறலை.

### பயிற்சி 1

1. கீழ்வரும் பதங்களில் உள்ள முதல் எழுத்துக்களைக் காட்டுக:—அரவம், ஆட்டு, இதழ், ஈசல், உறவு, ஊமத்தம், எள் ஏர், ஐயர், ஒட்டு, ஓர்தல், ஔவை.

2. ஆதபன், இம்மனிதன், யௌவனம்: எழுத்துக்களின் வகை இலக்கணம் கூறுக.

(உதாரணம் :—அ: முதல், உயிர், குறில், சுட்டு.)

3. சுட்டெழுத்துக்கள் மொழியின் முன்னும் பின்னும் வருமா ?

4. வினா எழுத்துக்கள் எவ்வெவ்விடங்களில் வரும் ? உதாரணம் தந்து தெரிவி.

5. மொத்தத்தில் நெட்டெழுத்துக்கள் எத்தனை ? குற்றெழுத்துக்கள் எத்தனை ?

6. உயிர்மெய் எழுத்து சார்பெழுத்தாவது எப்படி ?

7. வல்லின றகரம், இடையின ழகரம் வரும் பத்து மொழிகள் தருக.

### எழுத்துக்களின் ஒலியளவு

**12.** எழுத்துக்களை உச்சரிப்பதற்காகக் கால அளவு உண்டு. அவ்வளவின் பெயர் மாத்திரை. ஒரு கைந் நொடிப் பொழுதும், ஒரு கண் இமைக்கும் நேரமும் ஒரு மாத்திரையாகிய கால அளவாகும்.

| | | |
|---|---|---|
| எவ்வகைக் குற்றெழுத்திற்கும் | மாத்திரை | 1. |
| நெட்டெழுத்திற்கு | ,, | 2. |
| மெய்யெழுத்திற்கு | ,, | $\frac{1}{2}$. |
| ஆய்த எழுத்திற்கு | ,, | $\frac{1}{2}$. |

இவ்வளவின்படியே ஒவ்வொரு எழுத்தையும் உச்சரித்தல் வேண்டும்.

உதாரணம்

காட்டரண் $=2+\frac{1}{2}+1+1+\frac{1}{2}=5$ மாத்திரை.
கபோலம் $=1+2+1+\frac{1}{2}=4\frac{1}{2}$ மாத்திரை.

## குற்றியலுகரம் (சார்பெழுத்து)

**13**. குற்றியலுகரத்தின் இலக்கணமாவது :—

இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களாலான மொழிக்கு இறுதியில் நின்ற வல்லின உகரமும், ஈரெழுத்து மொழியாயின் நெட்டெழுத்திற்குப் பின்னின்ற வல்லின உகரமும் குற்றியலுகரம் ஆகும்.

உதாரணம்

**வாது**: இந்த மொழியின் இறுதியில் வந்த 'கு' என்னும் வல்லின உகரம் இரண்டு எழுத்திற்குப் பின்னின்ற குற்றியலுகரம்

**கோது**: இந்த மொழியின் இறுதியில் வந்த 'து' என்னும் வல்லின உகரம் தனி நெட்டெழுத்துக்குப் பின்னின்ற குற்றியலுகரம்.

**14**. குற்றியலுகரம் என்றதன் பெயர்க்காரணம்

மேற் காட்டியவாறு வரும் வல்லின உகரம், மற்ற குற்றெழுத்துக்களைப் போலல்லாது, தன் ஒரு மாத்திரையினின்றுங் குறுகி, அரை மாத்திரைதான் ஒலிக்கும். குறுகி ஒலிக்கும் தன்மையுடைய வல்லின உகரம் குற்றியலுகரம் எனப்பட்டது.

உதாரணம்

**நாடு**: இதற்குரிய மாத்திரை, $2+\frac{1}{2}=2\frac{1}{2}$. 'டு' குற்றியலுகரமாதலால் அரை மாத்திரை ஒலித்தது.

**தவிடு**: இதற்குரிய மாத்திரை $1+1+\frac{1}{2}=2\frac{1}{2}$. 'டு' குற்றியலுகரமாதலால் அரை மாத்திரை ஒலித்தது.

**பத்து**: இதற்குரிய மாத்திரை $1+\frac{1}{2}+\frac{1}{2}=2$. 'து' குற்றியலுகரமாதலால் அரை மாத்திரை ஒலித்தது.

## 15. குற்றியலுகரங்களின் ஆறு வகைகள்.

1. நெடிற் றொடர்க் குற்றியலுகரம்.
2. வன் தொடர்க் குற்றியலுகரம்.
3. மென் தொடர்க் குற்றியலுகரம்.
4. இடைத் தொடர்க் குற்றியலுகரம்.
5. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.
6. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.

## 16. குற்றியலுகர வகைகளை இனமறியும் ஆறு

கடைசிக்கு முந்தின எழுத்தைக் கவனித்து அது மெய்யெழுத்தாயின், அது எவ்வகை எழுத்தோ அவ் வகைத் தொடர்க் குற்றியலுகரம் எனல் வேண்டும். உதாரணமாக, ஈற்றிற்கு முன்னின்றது உயிர் மெய் எழுத்தாயின், உயிரின் ஓசையே பின்னின்று ஒலிப்பதால் 'உயிர்த் தொடர்' எனல் வேண்டும்.

**உதாரணம்**

ஆடு: 'டு'—ஈற்றிற்கு முன்னுள்ள தனி நெட்டெழுத்தைத் தொடர்ந்தமையால், நெடிற் றெடர்க் குற்றியலுகரம்.

சுக்கு: 'கு'—வல்லின ஒற்றைத் தொடர்ந்தமையால் வன் றெடர்க் குற்றியலுகரம்.

பஞ்சு: 'சு'—மெல்லின ஒற்றைத் தொடர்ந்தமையால் மென்றெடர்க் குற்றியலுகரம்.

சால்பு: 'பு'—இடை யெழுத் தொன்றைத் தொடர்ந்தமையால், இடைத் தொடர்க் குற்றியலுகரம்.

அஃது: 'து'—ஆயுத எழுத்தைத் தொடர்ந்தமையால் ஆயுதத்தொடர்க் குற்றியலுகரம்.

வரகு: 'கு'—இது உயிர் மெய் எழுத்தைத் தொடர்ந்தமையால் உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.

## முற்றியலுகரம்

**17.** பசு, மது, படு, அறு, அழு, வாயு, விம்மு - இச்சொற்களின் ஈற்று உகரங்கள் குற்றியலுகரங்கள் ஆகா. பசு, மது, படு, அறு—இவற்றின் ஈற்று வல்லின உகரங்கள் தனிக் குறிலை அணைந்து நின்றமையாலும், அழு, வாயு, விம்மு—இவற்றின் ஈற்று உகரங்கள் வல்லின உகரம் அல்லாமையாலும், இவை குற்றியலுகரங்கள் அல்ல. இவற்றின் ஈற்று உகரங்களை ஓசை கூட்டி உச்சரித்துப் பார். அவை தமக்கென்று ஏற்பட்ட ஒரு மாத்திரை ஓசை யளவினின்றுங் குறைகிறதில்லை. ஆகையால் இவை முற்றியலுகரங்களே.

## குற்றியலிகரம் (சார்பெழுத்து)

**18.** குற்றியலிகரத்தின் இலக்கணமாவது:—

சில இடங்களில் இகர உயிர்மெய் தனக்குரிய ஒரு மாத்திரை யளவு ஓசை பெறுமல் அரை மாத்திரை யளவாய்க் குறுகி ஒலிக்கும். அவ்வாறு குறுகி ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனப்படும்.

'ஓடி,' 'நானியார்': இவ்விரண்டு பதங்களிலும் உள்ள இகர உயிர் மெய்களை உச்சரிக்கையில், 'நானியார்' என்ற பதத்திலுள்ள 'னி' என்பது ஓசை குறைவதைக் கவனி.

**19.** குற்றியலிகரம் பிறக்கும் இடங்களாவன:—

**1.** குற்றியலுகரத்தோடு யகர உயிர்மெய் வந்து புணரின் அக்குற்றியலுகரம் குற்றியலிகரமாகி ஒலிக்கும்.

நாடு=யாது=நாடியாது: 'டி' குற்றியலிகரம்.
கொக்கு + யாது=கொக்கியாது: 'கி' ,,
மற்று + யாது=மற்றியாது: 'றி' ,,

2. சில மெய் எழுத்துக்களோடு யகரம் முதலாக உடைய மொழி வந்து புணருங்கால், இகரம் தோன்றும். அது அரை மாத்திரைதான் ஒலிக்கும்.

நான் + யார் = நானியார்: 'னி' குற்றியலிகரம்.
மண் = யானை = மண்ணியானை: 'ணி' ,,
ஓர் + யாறு = ஓரியாறு: 'ரி' ,,

3. அசைச் சொல் 'மியா' என்பதன் இகரமும் பதத்தோடு தொடர்ந்து புணரின் குறுகும்.

கேள் + மியா = கேண்மியா: 'மி' குற்றியலிகரம்.

## பயிற்சி 2

1. இப்பதங்களில் உள்ள எழுத்துக்களின் மாத்திரை எத்தனை யென்று காட்டுக:—எது, எது, காடு, கடு, முத்து, மோகனம், அணில், ஆபரணம், அணங்கு.

2. கீழ் வருவனவற்றிலுள்ள குற்றியலுகர ஈற்றுப் பதங்களைக் காட்டி, அவை எத்தொடர் என்றும், அம்மொழியின் ஓசையளவு யாது என்றும் காட்டுக:—

சங்கு சுட்டாலும் வெண்மை மிக்கு ஒளிரும்.
நெஞ்சு தன்னில் ஐந்து எழுத்து மந்திரம் பேணு.
கதவு பெரிது, தாழ் மிகச் சிறிது.
அஃது, இஃது என்று அறியக்கூடாத பொருளை உதுகாண் என்று உரைப்பது எங்ஙனம்.

3. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம், இடைத் தொடர்க் குற்றியலுகரம் - இவற்றை இனமறிவது எப்படி?

4. வன்றொடர்க் குற்றியலுகரம் எழு எழுதுக

5. கீழ்வருவனவற்றுள் குற்றியலிகரங்களைக் காரணத்தோடு காட்டுக:—

நானியார்? நளனின் நாடியாது?—
தாளிலாத கதவியாது?
அது இல்லையாயின், மற்றியாது சொல்.

மண்ணியானை; பொன்னின் கேள்வன்.
ஓரியானை; ஓர் மனிதன்.

6. குற்றியலிகரம் எவ்வாறெல்லாம் பிறக்கும்?

## போலி

**20.** ஒரு சொல்லில் சுயமாக வரவேண்டிய ஒரு எழுத்திற்குப் பதிலாக, அச் சொல்லின் அர்த்தம் மாருத படி வேறு எழுத்து வருதலும் உண்டு. அவ்வெழுத்து, 'போலி எழுத்து' என்றும், 'போலி' என்றும் பெயர் பெறும். போல நிற்பது போலி.

**21.** போலிகள் மூவகைப்படும். அவையாவன:—

1. மொழி முதற் போலி
2. மொழி இடைப் போலி
3. மொழி கடைப் போலி

1. மொழி முதற் போலியாவது ஒரு மொழியின் முதலில் ஒரு எழுத்திற்குப் பதிலாக மற்ருெரு எழுத்து அர்த்தம் மாருமல் வருவது.

உதாரணம்

| சுயம் | போலி |
|---|---|
| வைத்தியன் | வயித்தியன் |
| வையகம் | வய்யகம் |
| ஐயர் | அய்யர் |
| ஔவை | அவ்வை |
| பைசல் | பசல் |
| நாயிறு | ஞாயிறு |
| நண்டு | ஞண்டு |

2. மொழி இடைப் போலியாவது ஒரு பதத்தின் இடையில் ஒரு எழுத்திற்குப் பதிலாக மற்ருெரு எழுத்து அர்த்தம் வேறுபடாமல் நிற்பது.

உதாரணம்

| சுயம் | போலி |
|---|---|
| நீந்தினன் | நீஞ்சினன் |
| அரயன் | அரையன் |
| ஐந்நூறு | ஐஞ்ஞூறு |
| செய்ந்நின்ற | செய்ஞ்ஞின்ற |

3. மொழி கடைப் போலியாவது ஒரு மொழியின் ஈற்றில் ஒரு எழுத்திற்குப் பதிலாக மற்றது பொருள் மாறுமல் பொருந்தி நிற்பது.

உதாரணம்

| சுயம் | போலி |
|---|---|
| முகம் | முகன் |
| அகம் | அகன் |
| பந்தல் | பந்தர் |
| குடல் | குடர் |
| வண்டு | வண்டர் |
| சுரும்பு | சுரும்பர் |
| இடக்கு | இடக்கர் |
| பக்கம் | பக்கல் |
| திறம் | திறல் |

**22.** இப்போலிகள் பெரும்பான்மை உலக வழக்கியலின் இயல்புபற்றி நிகழா நிற்கும். போலிகளால் பொருள்மாறு இல்லையென்று ஏற்பட்டனவற்றிற் கன்றி, யாவற்றினுக்கும் செல்லாதென்று அறிக. இவ்வெழுத்துப் போலிகள் தவிர, மரபுபற்றிப் புலவர்களால் எடுத்தாளப் பட்டு வரும் பதப்போலிகளும் உண்டு.

உதாரணம்

| சுயம் | போலி |
|---|---|
| இல்முன் | முன்றில் |
| கோவில் | கோயில் |

| | |
|---|---|
| இல்வாய் | வாயில் |
| பொதுஇல் | பொதியில் |
| நகர்ப் புறம் | புறநகர் |

பயிற்சி 3.

1. எவ்வெவ் வெழுத்திற்கு எவ்வெவ் வெழுத்துப் போலியாக வரும்?

2. போலி எழுத்துக்களை நீக்கி எழுதுக:—பக்கல், பந்தர், திறல், முகன், அறன், குடர், மரன், மையல், பைசல்.

3 போலி எழுத்துக்களை உபயோகித்து எழுதுக:—வைத்தியன், மதில், சோம்பல், அரசன், சாம்பல், நண்டு, நயம், கோவில்.

4. போலி என்றால் என்ன ? பதப்போலிக்கு மூன்று உதாரணம் தருக.

## 23. எழுத்தின் வகைகள்



# II சொல்லியல் (ETYMOLOGY)

**24.** எழுத்துக்கள் தனித்தேனும், இரண்டு முதலாகத் தொடர்ந்தேனும் நின்று பொருள் பயக்குமாயின் அது சொல் எனப்படும்.

உதாரணம்

நீ, வா, கை, வை, சீ, போ:—ஓரெழுத்தே நின்று தனித் தனி மொழிகள் ஆயின.

அரி, அழகு, அன்னம், அவதானம், அருப்பணம் :—இரண்டு முதலாக எழுத்துக்கள் தொடர்ந்து நின்று பொருளுடைய பதங்கள் ஆயின.

பலவகைச் சொற்கள்

**25.** தமிழ்ப் பாஷையின் சொற்கள், பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல் என நான்கு வகையின்பாற்படும். பிற பாஷைகளிலிருந்தும், வட மொழியாகிய ஸம்ஸ்கிருதத்திலிருந்தும் வந்து தமிழில் வழங்கும் சொற்கள் திசைச் சொல், வட சொல் என இரு வகையின்பாற்படும். ஆகச் சொற்கள் ஆறு வகைப்படும்.

**26.** தமிழின் நால்வகைச் சொற்கள் (The four different parts of speech):—

1. பெயர். 2. வினை. 3. இடை. 4. உரி.

**27.** பெயர்ச் சொல் (Noun)

இடுகுறி, காரணம் முதலியன தொடர்ந்து, திணை, பால், எண், இடம் இவற்றுள் ஒவ்வொன்றினை ஏற்பதாகியும், எட்டு வேற்றுமைகள் சார்தற்கு இடமாகியும், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் இவ்வாறினுள் ஒன்றினடியாகப் பிறக்கும் பெயரே பெயர்ச்சொல்லாம்.

உதாரணம்:—மரம், பறவை, கிருஷ்ணன், மதுரை, மாசி, மயிர், மமதை, மடி.

**28**. இடுகுறிப் பெயர்:—யாதாமொரு காரணமும் இல்லாமல், பொருட்களை இனமறிதற்கான அடையாள மாக இடப்பெற்று வழங்கும் பெயர் இடுகுறிப் பெயராம்.

உதாரணம்:—மண், சோறு, பூனை, எலி: இப்பெயர்கள் காரண மில்லாமல் வந்த இடுகுறிப் பெயர்கள்.

**29**. காரணப் பெயர்:—யாதேனும் காரணம் பற்றிப் பொருட்களை இனங்காட்டும் பெயர்களாய் அமைந்து வருவன காரணப் பெயர்களாம்.

உதாரணம்

பறவை:—பறத்தல் காரணம் பற்றிப் பக்ஷிகளுக்குரிய காரணப் பெயர்.

கரி:—கரத்தை யுடைய காரணம்பற்றி யானைக்குரிய காரணப்பெயர்.

நிலம்:—நிலையாய் நிற்கும் இயல்புடைய காரணம்பற்றிப் பூமிக்குரிய காரணப் பெயர்.

காரணப் பெயருக்கு வேறு உதாரணங்கள்:—

கடவுள், காக்கை, கிண்கிணி, காற்றூடி, போர்வை, மண்வெட்டி, நாற்காலி, கவிகை முதலியன.

**30**. பொருளாதி அறுவகைப் பெயர்கள்

1. பொருட் பெயர்:—பொருளால் வரும் பெயர்கள் பொருட் பெயர்களாம்.

உதாரணம்

இராமன், சீதை, அப்துல்——மனிதர் பெயர்.
சிங்கம், புலி, பசு, முசு ——மிருகங்களின் பெயர்.
பொன், மண், கதவு ——பொருட்களின் பெயர்.
காவிரி, கங்கை ——நதிகளின் பெயர்.

வாத்து, கிளி, கழுகு ——பறவைகளின் பெயர்
பாம்பு, எறும்பு, தேள் ——ஊர்வனவற்றின் பெயர்

இவையாவும் பொருட் பெயர்களே.

2. இடப் பெயர்:—இடத்தால் வரும் பெயர் இடப் பெயர்.

உ-ம். மதுரை, தஞ்சை, சென்னை, நாடு, தீவு, வைகுண்டம், பாதலம், வானம், ஊர், சேரி, நகர்.

3. காலப் பெயர்:—காலத்தின் பெயராக வருவது காலப் பெயர்.

உதாரணம்:—ஆண்டு, மாதம், மாசி, கார், கூதிர், வசந்தம், விநாடி, நாழிகை.

4. சினைப் பெயர்:—உறுப்பின் பெயராக வருவது சினைப் பெயர்.

உதாரணம்

| முதற் பெயர் | சினைப் பெயர் |
|---|---|
| உடம்பு | கண், காது, மூக்கு, விரல் |
| மரம் | வேர், இலை, காய், பூ, கனி |
| யானை | வால், தந்தம், துதிக்கை, கபாலம் |

பொருளின் பெயர் முதற் பெயராம். பொருளின் உறுப்புப் பெயர் சினைப் பெயராம்.

5. குணப் பெயர்.—ஒரு பொருளின் குணத்தின் அல்லது பண்பின் பெயராக வருவது குணப் பெயர். பண்பை உணர்த்தும் இப் பெயர் பண்புப் பெயர் என்றும் கூறப்படும். இது பெரும்பாலும் 'மை' விகுதி அல்லது கடை நிலை பெற்று வரும்.

உதாரணம்

கருமை, செம்மை, நன்மை, தீமை, நுண்மை, பருமை, வெம்மை, தண்மை.

'மை' விகுதி பெறாத பண்புப் பெயர்கள்:—

அன்பு, அழகு, காருண்யம், கிருபை.

6. தொழிற் பெயர்: தொழிலுக்குப் பெயராக வருவதெல்லாம் தொழிற் பெயர். 'தொழில்' எனினும் 'வினை' எனினும் ஒன்று. ஆதலின் இது வினைப் பெயர் என்றும் பெயர் பெறும்.

உதாரணம்

| | |
|---|---|
| படிப்பு: | இது படித்தல் தொழிலின் பெயர். |
| வருகை: | இது வருதல் ,, ,, |
| நடை: | இது நடத்தல் ,, ,, |
| கொலை: | இது கொல்லுதல் ஆகிய தொழிலின் பெயர். |

வேறு உதாரணங்கள்:—ஆடல், பாடல், ஆட்டம், ஓட்டம், அசைவு, வரவு, கரவு, கொள்ளை, களவு, நடுதல், படல், கடவுள், கோட்பாடு, கல்வி, கேள்வி, மறதி, செய்தி, பொறுமை, வர்தமை, தோற்றரவு.

## 31. தொழிற் பெயர் பிறக்கும் வகை :—

தொழிலை உணர்த்தும் மூலச் சொல்லாகிய வினைப் பகுதியோடு தல், அல், அம், கை, ஐ, வி, சி, தி, உள், பாடு முதலிய விகுதிகள் சேருதலால், தொழிற் பெயர் தோன்றும்.

உதாரணம்

'ஆடு' என்னும் வினையடியாகப் பிறந்த தொழிற் பெயர்கள்: ஆடுதல், ஆடல், ஆட்டம், ஆடுகை, ஆடை.

'கேள்' என்னும் வினையடியாக வருந் தொழிற் பெயர்கள் கேட்குதல், கேட்டல், கேள்வி, கேட்கை.

'வா' என்ற வினைப்பகுதியினின்று வருந் தொழிற் பெயர்கள்: வருதல், வரல், வருகை, வரவு, வரத்து.

## 32. பல்வகைத் தொழிற் பெயர்கள்.

1. முதனிலையாகிய பகுதிவினையே தனி நின்று தொழிற்பெயராதலும் உண்டு.

உதாரணம்:—அடி, உதை, மிதி, வெட்டு, குத்து.

2. முதனிலை திரிந்து தொழிற் பெயராதலும் உண்டு.

உதாரணம்

| முதனிலை | தொழிற் பெயர் |
|---|---|
| கெடு | கேடு |
| சுடு | சூடு |
| கொள் | கோள் |
| படு | பாடு |
| இடு | ஈடு |
| அறு | ஆறு |

3. முதனிலை திரிந்தும் விகுதி பெற்றுந் தொழிற் பெயராதலும் உண்டு.

உதாரணம்

| முதனிலை | தொழிற் பெயர் |
|---|---|
| கொல் | கோறல் |
| வெல் | வேறல் |
| கொள் | கோடல் |
| நொ | நோதல் |

4. காலங் காட்டுந் தொழிற் பெயரும் உண்டு.

உதாரணம்

| | |
|---|---|
| வந்தமை | வருகின்றமை |
| செய்தது | செய்கிறது—செய்வது |

5. எதிர்மறையில் தொழிற் பெயர் நிகழுலும் உண்டு.

உதாரணம்

நடவாமை, பொறுமை, கூறுமை, பேசாமை

## இருதிணை

**33.** திணையாவது வகுப்பு. அது உயர்திணை, அஃறிணை என இரு வகைத்து. மக்கள், தேவர், நரகர்

ஆகிய ஆறு அறிவு உயிர்கள் உயர்திணை. மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணைப் பொருட்கள்.

**உயர்திணை=உயர்ந்த வகுப்பு. அவ்வுயர்வு அல்லாத வகுப்பு=அஃறிணை.**

**34**. பெயர்ச் சொற்களை யெல்லாம் இவ்விரண்டு திணையில் ஒன்றினுட்பட வகுத்துவிடலாம்.

**உயர்திணைப் பெயர்கள்**

சிவன், காசிபன், ஆதிசேஷன், பத்மாவதி, பவானந்தன், அப்துல், மகமது, உருப்பசி, ஜியார்ஜ், கோகலே, பாண்டியன்.

**அஃறிணைப் பெயர்கள்**

சிங்கம், கழுகு, பல்லவி, எலி, பசு, குதிரை, கோழி, பொன், மண், மணி, கற்பு, சண்டை, மாசி, காது, உடம்பு.

**35**. தெய்வங்களை இருதிணையிலும் கூறுவதுண்டு:-

**உதாரணம்**

சூரியன் உதித்தான், உதித்தது.
சந்திரன் எழுந்தான், எழுந்தது.
கலி நீங்கினன், நீங்கிற்று.

## ஐம்பால் (The Five Genders)

**36**. பால் என்பது பகுப்பு அல்லது பிரிவு. எவ்வகைப் பொருட் பெயர்களும் தமிழ் இலக்கண முறைப்படி ஐந்து பால்களாகவே பகுக்கப்படும்.

**37**. உயர்திணைப் பெயர்ச் சொற்கள், **ஆண், பெண், பலர்** என்ற மூன்று பாற் பட்டனவாயும், அஃறிணைப் பெயர்ச் சொற்களுள் ஆண், பெண் பகுப்பை உண

ராது, அவை ஒன்று, பல என இருபாற் பட்டனவாயும் கொள்ளப்படும். எனவே,

உயர்திணைக்குரிய பால்கள் 3.

1. ஆண்பால்: மனுஷன், அரசன், நல்லான்.
2. பெண்பால்: மனுஷி, அரசி, நல்லாள்.
3. பலர்பால்: மனுஷர், அரசர், நல்லார்.

அஃறிணைக்குரிய பால்கள் 2.

1. ஒன்றன்பால்: பசு, புலி, மரம், கல்.
2. பலவின்பால்: பசுக்கள், புலிகள், மரங்கள், கற்கள்.

**38**. சிற்சில ஆண், பெண் பகுப்பைக் காட்டும் பெயர்கள் அஃறிணையிலும் உண்டு. ஆயினும் அவை அஃறிணைப் பெயரே.

| | | |
|---|---|---|
| (ஆண் யானை) | களிறு ஓடிற்று; | களிறுகள் ஓடின. |
| (பெண் யானை) | பிடி நடந்தது; | பிடிகள் நடந்தன. |
| (ஆண் மாடு) | காளை பாய்ந்தது; | காளைகள் பாய்ந்தன. |
| (பெண் மாடு) | பசு மேய்ந்தது; | பசுக்கள் மேய்ந்தன. |

இதர உதாரணங்கள்:--சேவல், பெடை; கடுவன், மந்தி.

**39**. ஆண்பால் பகுப்பில் ஒன்றிற்கு மேற்பட்டதும், பெண்பால் பகுப்பில் ஒன்றிற்கு மேற்பட்டதும், இரு பாலாரும் விரவியதும் பலர்பாலேயாம்.

உதாரணம்

| | |
|---|---|
| சிறுவன் | ஆண்பால் |
| சிறுமி | பெண்பால் |
| சிறுவர் | பலர்பால் |
| மைந்தர் | பலர்பால் (ஆண்பால் பன்மை) |
| மகளிர் | பலர்பால் (பெண்பால் பன்மை) |
| மக்கள் | பலர்பால் |

**40.** சிறுவர் மக்கள் முதலிய சொற்கள் எப்பாலின் பன்மை என்பது சந்தர்ப்பத்தினால் துணியப்படும்.

உதாரணம்

அடிசில் சமைத்து ஆடிய சிறுவர்—ஈண்டு 'சிறுவர்' பெண் பாற் பன்மை.

போருக்கு எழுந்த மக்கள்—ஈண்டு 'மக்கள்' ஆண்பாற் பன்மை.

**41.** மக்கள், மாந்தர் — இவ்விரண்டும் பலர் பாலுக்கே உரியன.

**42.** ஒருமைப் பால்கள் 3. அவை:—
ஆண், பெண், ஒன்றன் பாற்கள்.

பன்மைப் பால்கள் 2. அவை:—
பலர், பலவின் பாற்கள்.

## எண் (Number)

**43.** எண்ணாவது இலக்கம். பொருளின் பெயர்கள் ஒன்றாக அல்லது பலவாக அறியப்படும். இம்முறையில் எண் இரண்டே. அவை, 1. ஒருமை=ஒன்றாயிருக்கும் தன்மை; 2. பன்மை=இரண்டு முதலாகப் பலவாயிருக்குந் தன்மை. ஐம்பாலுள் ஒருமையும் பன்மையும் உணர்த்தும் பெயர்கள் அடங்கிவிட்டனபடியால் நன்னூல் ஆசிரியர் 'எண்' என வேறு எடுத்து ஓதிலர்.

**44.** ஒருமைப் பெயர்களின் ஈற்றில், கள், அர், மார், அ முதலிய விகுதிகள் சேர, அவைகள் பன்மைப் பெயர்கள் ஆகும்.

| ஒருமை | பன்மை |
|---|---|
| குதிரை | குதிரைகள் |
| யானை | யானைகள் |
| சிறுவன் | சிறுவர் |
| மனிதன் | மனிதர் |
| குரு | குருக்கள், குருமார் |
| செட்டி | செட்டிகள், செட்டியார் |
| கரியது | கரியன |

## மூவிடம் (Three Persons)

**45**. இடமாவது சொற்கள் வழங்கும் **ஸ்தானம்**. சொற்கள் யாவும் மூவிடங்களுக்கு உரியனவாக அறியப் படும்.

**46**. பேசுவோன் தன்னைக் குறிப்பது **தன்மை** இடம்.
கேட்போன் தானத்தைக் குறிப்பது **முன்னிலை** ,,
மற்றவை யாவும் **படர்க்கை** ,,

**47**. ஒருவன் தன்னையே குறிக்க வழங்கும் பெயர் **தன்மைப் பெயர்**.

ஒருவன் முன் நிற்போனைக் குறிக்க வழங்கும் பெயர் **முன்னிலைப் பெயர்**.

ஒருவன் படர்ந்துள்ள புறப்பொருட்களைக் குறிக்க வழங்கும் பெயர்கள் யாவும் **படர்க்கைப் பெயர்**.

**உதாரணங்கள்**

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| **தன்மை :** | நான், யான் | நாம், யாம். |
| **முன்னிலை :** | நீ | நீர். நீவிர், எல்லீர். |
| **படர்க்கை :** | அவன், அவள், அது | அவர், அவை. |
| | கப்பல் | கப்பல்கள், |
| | வீடு, | வீடுகள். |

குரங்கு, குரங்குகள்.
மனிதன், மனிதர்.

**48.** மூவிடத்திற்கும் பொதுவான பெயர் 'எல்லாம்.'

உ - ம். யாம் எல்லாம், நீர் எல்லாம், அவர் எல்லாம்.

## சில பொதுப் பெயர்கள்.

**49.** இரு திணைக்கும் பொதுவாயும், ஒருமைப் பால்களுக்கும் பன்மைப் பால்களுக்கும் பொதுவாயும் வழங்கும் பொதுப் பெயர்கள் உண்டு.

உதாரணம்

| | |
|---|---|
| சாத்தன் இவன்<br>சாத்தன் இவ்வெருது | 'சாத்தன்'<br>ஆண்மைப் பொதுப் பெயர் |
| சாத்தி இவள்<br>சாத்தி இப்பசு | 'சாத்தி'<br>பெண்மைப் பொதுப் பெயர் |
| தந்தை இவன்<br>தந்தை இவ்வெருது | 'தந்தை'<br>ஆண்மை முறைப் பொதுப் பெயர் |
| தாய் இவள்<br>தாய் இப்பசு | 'தாய்'<br>பெண்மை முறைப் பொதுப் பெயர் |
| கோதை இவன், கோதை இவள்<br>கோதை இது | 'கோதை'<br>ஒருமைப் பொதுப் பெயர் |
| கோதைகள் இவர்<br>கோதைகள் இவை | 'கோதைகள்'<br>பன்மைப் பொதுப் பெயர் |
| யான் நம்பி, யான் நங்கை<br>யான் பறவை | 'யான்'<br>தன்மை ஒருமைப் பொதுப் பெயர் |
| யாம் மக்கள்<br>யாம் பறவைகள் | 'யாம்'<br>தன்மைப் பன்மைப் பொதுப் பெயர் |
| நீ நம்பி, நீ நங்கை<br>நீ பறவை | 'நீ'<br>முன்னிலை ஒருமைப் பொதுப் பெயர் |
| நீர் மக்கள்<br>நீர் பறவைகள் | 'நீர்'<br>முன்னிலைப் பன்மைப் பொதுப் பெயர் |

**50.** மற்றும் சில போதுப் பேயர்கள்: தெய்வம், சேய், பேதை, பேய், ஊமை, செவியிலி, மூடவன், மூடத்தி, எல்லாம், தான், தாம் முதலியன.

**51.** போருட் பேயரின் சில வகைகள்

1. கிளைப்பேயர்: உறவு பற்றி வரும் பெயர் கிளைப் பேயர்.

(உ - ம்) அண்ணன், தங்கை, மாமன், மைத்துனன், அநுசன், தமர், நமர், தாயத்தார் முதலியன.

2. ஜாதிப் பேயர்: ஜாதிபற்றி வரும் பெயர் ஜாதிப் பேயர்.

(உ - ம்.) வேடன், குறவன், அமணன், பரவன், பாணன்

3. அளவுப் பேயர்: அளவு பற்றி வரும் பெயர் அளவுப் பேயர்.

உதாரணம்

காதம், மைல், அடி, அங்குலம்
தோலா, பலம், வீசை, மணங்கு
மரக்கால், படி, ஆழாக்கு
ஒன்று, இரண்டு, நூறு
} முதலியன

பயிற்சி 4.

1. அஃறிணை எனின் அர்த்தமென்ன?

2. உயர்திணை, அஃறிணைகளுக்குரிய பால்கள் எவ்வெவை?

3. உயிர், உடம்பு, குழந்தை, தெய்வம், சூரியன்—இவை என்ன திணைப் பெயர்கள்?

4. சில இருதிணைப் பொதுப் பெயர்கள் சொல்க.

5. பகடு, ஏறு, பசு, களிறுகள், பிடிகள், கலை, பிணைகள், கடுவன்கள், மந்தி – இவைகளில் ஆணுக்குரிய பெயரும் பெண்ணுக்குரிய பெயரும் தெரிவித்து, அவ்வவை எந்தப் பாலைச் சேர்ந்ததென்று சொல்லுங்கள்.

5. எண்ணின் பகுப்புகள் எங்ஙனம் அழைக்கப்படும்?

6. பலவின்பாற் பெயருக்கும் பலர்பாற் பெயருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

7. ஒன்றன்பாற் பெயருக்கும் ஒருமைப்பாற் பெயருக்கும் உள்ள வித்தியாச மென்ன?

8. எனவே, திணை, பால், எண் எவ்வெவற்றைக் குறிக்கிற இலக்கணமாகும்?

9. கீழ்க் கண்டவற்றின் ஒருமைப் பாலுக்குப் பன்மைப் பாலும், பன்மைப்பாலுக்கு ஒருமைப்பாலும் வேண்டும்.

குருமார், புலவர்கள், மகள், கோக்கள், சிறியவை, பசு, தந்தையர், ஆடவன், அணில்கள், சிறுவர், ஒருத்தி, வல்லான், தங்கை, பிறர், தோன்றல், களவுகள், மாது.

10. மேல் வந்துள்ள பலவின்பாற் பெயர்களைக் காட்டு.

11. ஆண்கள், பெண்கள், ஆடவர், பெண்டிர், மைந்தர், மகளிர்—இப் பெயர்களுக்குத் தனித்தனியே பாலும் எண்ணும் வகுத்துக் காட்டு.

12. ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை என்று கூறுதல் பொருந்துமா?

13. பெண்பாலுக்கு ஆண்பாலும் ஆண்பாலுக்குப் பெண் பாலும் பார்த்துரைக்க:—

நம்பி, தோழி, பொன்னன், சக்கரவர்த்தி, பண்டிதை, தேவன், நல்லாள், குமரன், சிறுமி, பாதகன், நீலன், கூனி, பிறள், நமள், ஈவான், ஆதிரையாள், பெருமாட்டி, காதலன், பிரியன், ஆயன், அரசி, தலைவன்.

14. கீழ்வரும் பெயர்களின் திணை, பால், எண், இட இலக்கணம் கூறுக:—

1. ஆண்டுஆண்டு தோறும் அழுதாலும் மாண்டார் வருவரோ?
2. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
3. நல்லாரைக் காண்பது நன்றே.

4. நின்னை மறவேனை நீ மறத்தல் என்னோ?

5. நல்லாய், மொழியிலார்க்கு எது முதுநூல்.

## வினையாலணையும் பெயர்

**52.** வினையாலணையும் பெயரின் இலக்கணமாவது:

நட, வா முதலிய வினையடியாகப் பிறந்து, வினைக்குரிய கர்த்தாவோடு, இருதிணை, ஐம்பால், மூவிடங்களில் ஒன்றினுக்கு அது உரித்தாவதை விகுதியினால் உணர்த்தியும், காலத்தைக் காட்டியும், வினையுடைய பொருளுக்குப் பெயராய் வருவதே வினையாலணையும் பெயர்.

உதாரணம்

நடந்தவன், வருகின்றவன்

**நடந்தவன்**—'நட' என்னும் வினை முதல் அடியாகப் பிறந்து, நடைத் தொழிலுக்குரிய கர்த்தா, உயர்திணை, ஆண்பால், படர்க்கை இடத்திற்கு உரியவன் என்பதை 'அன்' என்னும் விகுதியால் உணர்த்தித் தொழிலின் காலம் இறந்த காலம் என்பதைக் காட்டி, நடைத் தொழிலுக்குரிய ஆண் மகனுக்கே இது பெயராக வந்தபடியால், இது வினையாலணையும் பெயர்.

| வினை. அ. பெ | பால் | காலம் | இடம் |
|---|---|---|---|
| கற்றவன் | ஆண்பால் | இறப்பு | படர்க்கை |
| வருகின்றவள் | பெண்பால் | நிகழ்வு | ,, |
| ஓடுபவர் | பலர்பால் | எதிர்வு | ,, |
| மேய்ந்தது | ஒன்றன்பால் | இறப்பு | ,, |
| மேய்ந்தன | பலவின் பால் | ,, | ,, |

## எதிர்மறை வினையாலணையும் பெயர்கள்

உ-ம். கல்லாதார், கல்லார், கற்காதவன், நடவாதவள், ஓடாதது, போகாதவை, போகாதன.

**53.** வினையாலணையும் பெயர் மூவிடங்களில் வருமாறு:—

1. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்.'

'கற்றாரை,' 'கற்றார்' என்பன 'கற்றவர்' எனப் பொருள் படலால், இறந்த காலப் படர்க்கை வினை. அ. பெ.

2. 'காலத்தில் உதவி புரிந்தாய் நின்னைக் கணமும் யான் மறப்பேனா?'

ஈண்டுப் 'புரிந்தாய் நின்னை' என்பது, 'புரிந்தாயாகிய நின்னை' எனப் பொருள்தர, இறந்தகால முன்னிலை வினையாலணையும் பெயராயிற்று.

3. சிந்தனை யுனக்குத் தந்தேனைச் சிந்திக்காதிருப்ப தென்னோ, செந்தில் நாதா?

ஈண்டு 'தந்தேனை' என்பது 'தந்தேனாகிய என்னை' எனப் பொருள் தர, இறந்த காலத் தன்மை வினையாலணையும் பெயராயிற்று.

**54.** தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை:

ஒற்றுமை:

1. இரண்டும் வினை முதல் அடியாகப் பிறக்கும்.
2. இரண்டும் பெயர்க்குரிய வேற்றுமைகளை ஏற்கும்:

வேற்றுமை:

1. தொழிற் பெயர் படர்க்கை இடத்திற்கே உரியது.
   வினையாலணையும் பெயர் மூவிடத்திற்கும் உரியது.
2. தொழிற் பெயர் திணை, பால் காட்டாது.
   வினையாலணையும் பெயர் திணை, பால் உணர்த்தும்.

3. தொழிற் பெயர் தொழிலுக்கே பெயராய் வருவது.
வினையாலணையும் பெயர் தொழிலையுடைய பொருளுக்
காவது ஆளுக்காவது பெயராவது.

## பயிற்சி 5

1. கீழ்வரும் பெயருள் இடுகுறிப் பெயர், காரணப் பெயர், பொருளாதி அறுவகைப் பெயர், கிளைப் பெயர், ஜாதிப் பெயர், அளவுப் பெயர், தொழிற் பெயர், வினையாலணையும் பெயர், முதலியவைகளை எடுத்துக்காட்டி விதந் துரைக்க:—சிங்கம், குருவி குறத்தி, மதுரை, கடவுள், கோபாலன், கண், அரை, உடுப்பு, எலி, மைத்துனன், முழம், பசுமை, செம்மை, மறலி, யானை பறவை, சென்னை, அப்துல், வன்மை, களிறு, மாடப் புறா, பிடி, வீசை, டணங்கு, வண்ணான், புதுமை, நாற்காலி, மிருகம், மிருகேந்திரன், மயில், பசு, மாடு, கற்றவர், சீதை, உறவு, நடந்தவன், மாதம், தாமரை, பலா மரம், பாம்பு, நாகம், வருஷம், இலை, பூ.

2. கீழ்வரும் பெயர்களில் தொழிலை உணர்த்தும் மூலச் சொல் யாவை?—கேடு, ஒட்டம், பொறுமை, எடுப்பு, ஈடு, உடன் பாடு, கலப்பு, பகுதி, வகுப்பு, தொகை, சூடு, மறதி, கொல்லாமை, பாடு, மறைவு, கலப்பு, வரத்து, நீக்கம்.

3. கீழ்வரும் தொழிற் பெயர்களின் முதனிலை கடைநிலை, அதாவது பகுதி விகுதிகளைக் கூறுக:—கோட்பாடு, வீடு, வகை, செலவு, வரவு, ஆளுகை, நிற்றல், சேர்க்கை, கற்பு, செய்தி, சாட்டம், ஆடல், கேள்வி, செய்யுள்.

4. செல், கேள், வாழ், சா - இப்பகுதிகளி னடியாகப் பிறக்கும் தொழிற் பெயர்களை யெல்லாம் சொல்லுக.

5. பின்வரும் தொழிற் பெயரோடு ஒத்த பொருளுடையதும் அதன் பகுதியடியாகப் பிறந்ததுமான வேறு தொழிற் பெயர்கள் தருக:—

நடை, படிப்பு, வளர்ச்சி, தாழ்வு, புகழ், வாழ்தல், இருப்பு, கொடுத்தல், புதைத்தல்.

6. முதனிலைத் தொழிற் பெயர்கள் ஐந்து தருக.

7. தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன ?

8. பற, வெல், விடு, உண், பார் - இப்பகுதிகளி னடியாகப் பிறக்கும் ஐம்பால் வினையாலணையும் பெயர்களையும் முறையே முக்காலத்திற்கும் காட்டுக.

## வேற்றுமை—Case.

**55**. ஒரு பெயர்ச் சொல் வேறு சொற்களோடு வாக்கியத்தில் சம்பந்தப்படும் பொழுது, கருத்துக் கிசைந்தபடி, அப்பெயரின் பொருளை வேறுபடுத்துவதற்குக் காரணமான உருபுகள் அப்பெயரோடு பொருந்தி நிற்கும். அவை வேற்றுமை என்னப்படும்.

**56**. ஒன்று முதலாக எண்ணப்படும் வேற்றுமைகள் எட்டு. அவை, எழுவாய், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்பனவாகும்.

**57**. இயல்பில் வரும் பெயரானது ஒரு வாக்கியத்தில் எழுவாயாக அல்லது கர்த்தாவாக நின்று வேறு படுவதே முதல் வேற்றுமை. அவ்வெழுவாய், வினை, பெயர், வினா இம்மூன்றி லொன்றைப் பயனிலையாகக் கொள்ளும்.

உதாரணம்

1. விக்டோரியா நல்ல அரசி.
   'விக்டோரியா' எழுவாய்; 'அரசி' பெயர் பயனிலை.
2. இந்த மனிதன் யார் ?
   'மனிதன்' எழுவாய்; 'யார்' வினாப் பயனிலை.
3. அரசன் வென்றான்.
   'அரசன்' எழுவாய்; 'வென்றான்' வினைப் பயனிலை.

**58.** இரண்டாம் வேற்றுமை—இதன் உருபு 'ஐ' ஒன்றே. இது தன்னை ஏற்றுவரும் பெயர் செயப்படு பொருளாகும்படி வேற்றுமை செய்யும்.

உ-ம். வீமன் அரக்கனைக் கொன்றான்.

வீமனுடைய கொலையாகிய செயல் பட்ட பொருள் அரக்கன் ஆதலின், அது இரண்டாம் வேற்றுமை ஏற்றது.

**59.** மூன்றாம் வேற்றுமை—இதன் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு.

உ-ம். தச்சன் மரத்தை வாளால் அறுத்தான்.
கல்லானும் மண்ணானும் கட்டப்பெற்ற வீடு.

வாளால், கல்லான், மண்ணான்-மூன்றாம் வேற்றுமைப் பெயர்கள்.

ஆல், ஆன் இவ்விரண்டும் ஒரே பொருளில் வரும்.

உ-ம். தந்தையொடு மகன் வந்தான்.
தாயோடு மகள் வந்தாள்.

தந்தையொடு, தாயொடு-மூன்றாம் வேற்றுமைப் பெயர்கள்.

ஒடு, ஓடு இவ்விரண்டும் ஒரே பொருளில் வரும்.

ஆல், ஆன் உருபுகளுக்குப் பதிலாகக் 'கொண்டு' என்பதும், ஒடு ஓடு உருபுகளுக்குப் பதிலாக 'உடன்' என்பதும் சொல்லுருபுகளாக வரும்.

உ-ம். கத்திகொண்டு மயிர் களைந்தான்.
மழையுடன் இடிகள் விழுந்தன.

**60.** நான்காம் வேற்றுமை: இதன் உருபு 'கு' ஒன்றே.

உதாரணம்

யாசகர்க்குப் பொன் கொடுத்தான்.
கூலிக்கு வேலை செய்தான்.

யாசகர்க்கு, கூலிக்கு—4-ம் வேற்றுமைப் பெயர்கள்.

'பொருட்டு' என்பது இதன் சொல்லுருபு

உ-ம். பொருள் தேடுதற் பொருட்டுப் புறநாடு சென்றான்.

**61.** ஐந்தாம் வேற்றுமை:—இதன் உருபுகள் இன், இல்.

உதாரணம்

மலையின் வீழ் அருவி—'மலையினின்று நீங்கி விழும் அருவி' என்பது இதன் பொருள். ஆதலின் 'மலையின்' என்ற பெயர் 5-ம் வேற்றுமையில் வந்தது.

மதுரையின் வடக்கு சிதம்பரம். 'மதுரையின்' 5-ம் வேற்றுமைப் பெயர்.

காக்கையில் கரிது களம் பழம். 'காக்கையைப்போல' அல்லது 'காக்கையைப் பார்க்கிலும்' எனப் பொருள்படும். எனவே 'காக்கையில்' 5ம் வேற்றுமைப் பெயர்.

கல்வியில் பெரியவன் கம்பன்—'கல்வியில்' 5ம் வேற்றுமைப் பெயர்.

'இன்' உருபு வருமிடத்தில் 'நின்று,' 'இருந்து,' என்பன சொல்லுருபுகளாக வரும்.

உ-ம் வீட்டினின்று வெளியேறினான்.
திண்ணையிலிருந்து விழுந்தான்.

**62.** ஆறும் வேற்றுமை உருபுகளாக அது, ஆது (ஒருமைக்கும்), அ (பன்மைக்கும்) வரும்.

உ-ம் சாத்தனது கை.
எனது தலை. } ஒருமைக்கு வந்தது.

நின விரல்கள். } பன்மைக்கு வந்தது.

சாத்தனது, எனது, நின,—ஆறும் வேற்றுமைப் பெயர்கள்.

அரசனது மனை, என் கைகள் என்பன அரசனுடைய மனை, என்னுடைய கைகள் எனப் பொருள்படலால், இவ் வேற்றுமைக்கு 'உடைய' என்பது சொல்லுருபாக வரும்.

**63.** ஏழாம் வேற்றுமை:—இதன் உருபுகள் இல், கண் முதலியன.

உ-ம். மணியில் உள்ள ஓசை.
நீரில் அமிழ்ந்தான்.
முதற்கண் நின்ற பையன் சிவன்.
கடைக்கண் நின்றவன் சுபன்.

மணியில், நீரில், முதற்கண், கடைக்கண்—இவை ஏழாம் வேற்றுமை ஏற்றன. இவை முறையே மணியிடத்தில், நீரினிடத்தில், முதலிடத்தில், கடையிடத்தில் எனப் பொருள்பட்டு, 'இல்', 'கண்' உருபுகள் அவ்வவ்விடத்தைச் சுட்டின. ஆதலால் ஏழாம் வேற்றுமைக்கு 'இடத்தில்' சொல்லுருபாக வரும்.

உ-ம். காட்டிடத்தே கடுவாய் உண்டு.
வீட்டிடத்தில் பசுக்கள் உண்டு.
நாட்டிடத்தும் நன்மனிதர் உண்டு.

ஏழாம்வேற்றுமையின் இதர உருபுகள்:—கால், கடை, இடை, முன், பின், மேல் முதலியன.

**64.** எட்டாம் வேற்றுமை :—இதற்கு உருபுகள் இல்லை. படர்க்கைப் பெயர்களை முன்னிலைப் படுத்தித் தன் முகமாக விளிப்பதனால் அப்பெயர்களில் ஏற்படும் விகாரங்களே உருபுகளாம்.

உ-ம். வேந்தே, நின் அரசு வாழ்க.
நண்ப, நின்முகம் வாடியதென்னோ?
அண்ணா, யாது சொன்னாய்?
நம்பீ, நின் மாற்றந் தாராய்.
அப்பா, உன் பெயர் யாது?
அம்மவோ, ஐயனை யாண்டுக் கண்டாய்.

**65.** ஈண்டு முதற்கண் நின்ற பெயர்கள் யாவும் எட்டாம் வேற்றுமைப் பெயர்கள்: விளிவேற்றுமை ஏற்றன.

வேறு உதாரணங்கள்

| முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை |
|---|---|
| நங்கை | நங்காய் |
| மக்கள் | மக்காள் |
| நல்லாள் | நல்லாய் |
| நன்னுதல் | நன்னுதால் |
| இராமன் | இராமா |
| அரசன் | அரச |

**66.** தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்கள் தன், தம் எனவும், யான், யாம், நாம் என்னும் தன்மைப் பெயர்கள் என், எம், நம் எனவும், நீ, நீர் என்னும் முன்னிலைப் பெயர்கள் நின், நும், உம் எனவும் குறுக்கல் விகாரம் பெற்று, வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

**67.** விளிக்கப்படாத பெயர்கள்:—

1. தன்மை, முன்னிலைப் பெயர்கள்
2. 'அவன்' 'இவன்' 'உவன்' முதலிய சுட்டுப்பெயர்கள்.
3. 'எவன்' 'யாவன்' முதலிய வினைப் பெயர்கள்.

## பயிற்சி 6.

1. முதல் வேற்றுமையின் வேறு பெயர் யாது?

2. இராமன் எகலும், சீதையும் உடன் போந்தாள்—ஈண்டுள்ள முதல் வேற்றுமைப் பெயர்களைக் காட்டுக.

3. நான்கு எழுவாய்கள் வரும்படி ஓர் வாக்கியம் சொல்க.

4. செயப்படுபொருள் என்றால் என்ன? அது எத்தனும் வேற்றுமை ஏற்கும்?

5. இரண்டு செயப்படு பொருள் வர, ஓர் வாக்கியம் எழுது.

6. தச்சன் பெட்டியைச் செய்வான். பெட்டி என்பது எழுவாயாகும்படி இவ்வாக்கியத்தை மறித்து எழுது?

7. மரத்தைச் செய்தல் தச்சனால் கூடியதோ? இதிலுள்ள முதல் மூன்று வேற்றுமைப் பெயர்களையும் காட்டு.

8. கையோடு கை சேர்த்துப் பிடித்து வாளால் அறுத்தான்- 3-ம் வேற்றுமைச் சொல்லுருபுகளை மட்டும் சேர்த்து இவ்வசனத்தை எழுது.

9. மூன்றும் வேற்றுமையின் ஏனைய உருபுகள் எவை?

10. கூலிக்கு வேலை செய்தான் - கூலிக்கு என்ற பெயர் எந்த வேற்றுமை? 'கு' என்ற உருபை நீக்கி, வேறு எந்த எந்தச் சொல்லுருபுகளைச் சேர்த்து எழுதினால் பொருள் மாறாமல் இருக்கும்? எழுதிப்பார்.

11. முதல் நான்கு வேற்றுமைப் பெயர்களும் வரும்படி ஓர் வசனம் ஆக்குக.

12. வல்லனுக்கு வல்லன் உண்டு - வல்லனுக்கு என்ற பெயரை ஒட்டி வந்த நான்கனுருபிற்குப் பதிலாக இரண்டன் உருபை அமைத்து எவ்வாறு பொருள் மாறாது எழுதலாம்.

13. 5ம், 6ம், 7ம் வேற்றுமைகளின் உருபுகள் யாவை?

14. இல் உருபு 5 ம் வேற்றுமைக்கும் 7ம் வேற்றுமைக்கும் பொருந்துமாறு உதாரணங்கள் காட்டு.

15. விளி வேற்றுமை எந்த வேற்றுமை?

16. தன்மை முன்னிலைச் சொற்கள் விளிக்கப்படுமா?

17. விளி வேற்றுமையில் பெயர்களின் இடம் மாறுகிறதா? எப்படி?

18. விளி வேற்றுமைக்கு உருபுகள் உண்டா? பெயர்கள் விகார மடைந்து விளியேற்கும் பல வகைக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

19. கடலை, திருமாலை, சேலை—இவற்று ஈற்று ஐகாரத்தை நீக்கியும், நீக்காமலும், முதல் வேற்றுமைப் பெயர்களாகவே வரும் 7 வசனங்கள் எழுதுக.

## பயிற்சி 7. வேற்றுமை (தொடர்ச்சி)

I. கீழ்வரும் பெயர்களின் வேற்றுமை எது என்றுரைப்பாய்:—

1. பொன்னால் ஆகிய பொம்மை தகராது.
2. மலையின் வீழ் அருவி கடலுள் கலக்கலாயிற்று.
3. பொன்னனும் வெள்ளியானும் இயன்ற சிலை இது.
4. தன் கைகளே தனக்குத் துணை.
5. மிருகங்களில் பெரிய சிங்கம் மிருகத்துக்கு அரசன்.
6. நண்ப, நினது சுகம் எப்படி?
7. மன்ன, உனக்கு அபயம் என்று தரைக்கண் வீழ்ந்தான்.

II. நாராயணன் பூவோர் ஆயிரத்தைக் கரத்தாற் கொய்து அரனுக்கு ஈந்து, சக்கரச் சிறுமையி னீங்கிப் பாற்கடலில் பள்ளி கொண்டான். இதில் 7 வேற்றுமைகளும் வரும்படி ஓர் வாக்கியம் சொல்க.

III. கீழ் வருவனவற்றின் முதல் வேற்றுமை எவ்வாறு?

நன்னுதால், பெரியோய், எனக்கு, தம்மில், உன்னுடைய, வாயிற்கண், ஊரினின்று, எம்பால், எந்தாய், கண்ணால், மரத்துக்கு, எல்லாவற்றையும், தந்தேனை, அரசற்கு, கந்தா, அன்னையின் அன்பு.

IV. கீழ்வரும் பெயர்களில் விடப்பட்டிருக்கும் வேற்றுமையுருபுகளைச் சேர்த்து எழுது.

1. அருச்சுனன்—அம்புக—தலைகள் அற்று வீழ்ந்தன.

2. அன்னை—நான் ஓர் அதிசயம் கண்டேன்.

3. குழந்தை—தாய் பால்—ஊட்டுகையில், அது நாசி-
எறிற்று.

4. ஆலயத்—தொழுதற்—க் காலை—எழுந்தான்.

5. வேத—முதல்வன்—போற்றி, விண்ணவர்—எறு—
போற்றி.

V. வேற்றுமை யுருபுகளை நீக்கி எழுது !

1. போரை மேற்கொண்டு சென்ற புரவலன் வாகையைப் புனைந்து மீண்டான்.

2. வில்லாற் போரில் மலைந்து விரும்பிய வண்ணத்தில் வெற்றியைப் பெற்றான்.

3. குளத்தினுடைய கரை உடைந்ததால், சமீபத்தில் இருந்த மரமும் விழுந்தது.

4. பொன்னால் சிலையைச் செய்து, பூஜித்து வரத்தைப் பெற்றான்.

5. பணத்தைத் தேடிக் குணத்தில் கெட்டு வீட்டை யிழக்கும் வழிக்கண் செல்லாதே.

VI. கீழ்க்காண்கின்ற பெயர்களுக்கு இலக்கணம் (திணை, பால், எண், இடம் வேற்றுமை, முடிவு) கூறுக.

1. கல்வியிற் பெரிய கம்பன் இற்றை நாளிலும் புகழ் பெறுகின்றான்.

2. ஆலயந்தொழ அமலனை வேண்டு நீ.

3. சீதை என்பாள் இலங்கைக்கு நெருப்பாய் இருந்தாள்.

4. எந்தாய், கந்தனைத் தந்தாய், எனக்கு நின் அருள் தா.

5. சொல்லின் அருமையை வில்லியிற் காண்.

## வினைச் சொல் (Verb)

**68.** வினைச் சொல்லின் இலக்கணமாவது:—ஒரு பொருளின் தொழிலைத் தெரிவித்து, வேற்றுமை ஏற்காமல், திணை, பால், இடம், காலம், கர்த்தா முதலியவைகளைக் காட்டும் சொல் வினைச்சொல்லாம்.

'இராமன் வந்தான்' என்பதில், 'வந்தான்' என்னும் வினைச்சொல், வருகைத் தொழிலையும், அத்தொழிலுக்குரிய கர்த்தா, உயர்திணை, ஆண்பால், படர்க்கை இடத்தது என்றும், தொழில் எழுந்த காலம் இறந்த காலம் என்றும் காட்டிற்று.

'வந்தான்' என்னும் இவ்வினையானது, செய்பவன், செயல், காலம் முதலியவற்றைத் தெரியும் நிலையிற் காட்டிய படியால் தெரிநிலை வினை என்றும், ஒருவாக்கியத்தின் பயனிலையாக முற்றமுடிய நிற்கும் பண்பினதாகலின் தெரிநிலை வினைமுற்று என்றும் சொல்லப்படும்.

### காலம் (Tense)

**69.** ஒரு தொழில் நடை பெறுதற்கான காலம்

இறந்த காலம்
நிகழ் காலம் } என மூன்றும்
எதிர் காலம்

**70.** தெரிநிலை வினையிற் காலங் காட்டும் உறுப்பின் பெயர் இடை நிலை. அது முதலினும் கடையினும் வராமல், நடுவில் அல்லது இடையில் வருவதால் அப்பெயரால் அழைக்கப்படும்.

**71.** இறந்த கால இடை நிலைகள்: த், ட், ற், இன்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | படித்தான் | 'த்' இடைநிலை பெற்றது. | |
| | உண்டான் | ட் ,, | ,, |
| | கற்றார் | ற் ,, | ,, |
| | ஓடினாள் | இன் ,, | ,, |
| | சொல்லியது 'இன்' இடைநிலையில் இ மட்டும் வந்தது. | | |
| | சொன்னான் ,, | ன் ,, | ,, |

**72.** நிகழ் கால இடை நிலைகள்: கிறு, கின்று, ஆநின்று.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | கடிக்கிறான் | 'கிறு' இடைநிலை வந்தது. | |
| | செய்கின்றாள் | 'கின்று' ,, | ,, |
| | பாயாநின்றது | ஆநின்று ,, | ,, |

**73.** எதிர்கால இடைநிலைகள் ப் வ்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | படிப்பான் | 'ப்' இடைநிலை பெற்றது. | |
| | ஓடுவான் | 'வ்' ,, | ,, |

**74.** ஒரு வினைச்சொல்லில் முதலில் நிற்கும் உறுப்புக்குப் பகுதி என்றும், ஈற்றில் நிற்கும் உறுப்புக்கு விகுதி என்றும் பெயர். இவைகள் முறையே முதனிலை, கடைநிலை என்றும் பெயர் பெறும்.

**75.** பல உறுப்புக்களாகப் பகுக்கப்படக் கூடிய ஒரு பதத்தின் மூலச் சொல்லாயும், தன்னில் பகுக்கப் படக் கூடாததாயும் நிற்கும் உறுப்பே பகுதி.

| | | |
|---|---|---|
| உ-ம். | செய்தான் | செய் பகுதி. |
| | படித்தான் | படி ,, |
| | நடந்தான் | நட ,, |
| | கேட்டான் | கேள் ,, |
| | வெட்டினான் | வெட்டு ,, |
| | போட்டான் | போடு ,, |
| | பெற்றான் | பெறு ,, |

## 76. வினைப்பகுதிகள் வினைச்சொற்களில் விகாரப்பட்டு வருமாறு

வருகிறான்:—வா என்னும் பகுதி குறுகி, ரகரம் விரிந்து வந்தது.

செத்தான்:—சா என்னும் பகுதி குறுகி நின்றது.

வெந்தான்:—வே " "

கொணர்ந்தான்:-'கொணு' என்னும் பகுதி விகாரப்பட்டது.

அலமந்தான் 'அலமா' " "

மூழ்கினான் 'முழுகு' " "

**77.** பகுக்கப்படக் கூடிய ஒரு பதத்தின் ஈற்றில் இயைந்து நிற்பதும், தெரிநிலை வினைமுற்றின் ஈற்றில் திணை, பால், இடம் உணர்த்தும் உறுப்பும் விகுதி எனப் படும்.

| | |
|---|---|
| படர்ந்தான் | 'ஆன்' விகுதி. |
| சென்றாள் | 'ஆள்' " |
| எகினார் | 'ஆர்' " |
| போனது | 'து' " |
| போயின | 'அ' " |
| போகும் | 'உம்' " |

## ஐம்பால் மூவிடத்து விகுதிகள்

**78.** ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் அன், ஆன்.

வந்தனன், வந்தான் எனவரும்.

**79.** பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் அள், ஆள்.

வந்தனள், வந்தாள் எனவரும்.

**80.** பலர்பால் படக்கை வினைமுற்று விகுதிகள் அர், ஆர், ப, மார்.

படித்தனர் — கூறுப (கூறுவர்) } என
படித்தார் — கொண்டார் (கொள்வார்) } வரும்.

**81**. ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் து, று.

சென்றது, போயிற்று எனவரும்.

**82**. பலவின்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் அ, ஆ.

நடந்தன, நடவா எனவரும்.

**83**. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் ஐ, ஆய், இ.

கற்றனை, கற்றாய், கேட்குதி எனவரும்.

**84**. முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் ஈர், மின்.

நடந்தீர், நடமின் எனவரும்.

**85**. தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் அன், என், அல்.

படித்தனன், படிக்கின்றேன், படிப்பல் எனவரும்.

**86**. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் எம், ஓம், ஆம், அம் முதலியன.

படிப்பேம், படிப்போம் } எனவரும்.
படிப்பாம், படிப்பம் }

**87**. இவ்வாறு பகுதி, விகுதி, இடைநிலை முதலிய உறுப்புக்களைப் பெற்றுப் பகுக்கப்படக் கூடிய பதங்களுக்குப் பகுபதம் என்று பெயர்.

**88**. பெயர்ப் பகுபதங்கள், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்—இவ்வாறினடியாகப் பிறந்து மற்றை யுறுப்புக்களையும் பெற்று வரும்.

| | பெயர்ப்பகுபதம் | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|---|
| பொருள் | வலைஞன் | வலை | ஞ் | அன் |
| இடம் | மதுரையான் | மதுரை | | ஆன் |
| காலம் | வேனிலான் | வேனில் | | ஆன் |
| சினை | கண்ணன் | கண் | | அன் |
| குணம் | திண்ணன் | திண்மை | | அன் |
| தொழில் | அறிஞன் | அறி | ஞ் | அன் |
| | உழுநர் | உழு | ந் | அர் |
| | சான்றார் | சால் | ற் | ஆர் |

## உறுப்பிலக்கணம்

**89**. ஓர் பகுபதத்தைப் பகுதி, இடைநிலை, விகுதி முதலியனவாக உறுப்படுத்துக் காட்டும் இலக்கணத்திற்கு **உறுப்பிலக்கணம்** என்று பெயர்.

**90**. சில தொழிற் பெயர்களின் உறுப்பிலக்கணமாவது :

| தொழிற் பெயர் | பகுதி | விகுதி |
|---|---|---|
| கூடல் | கூடு | அல் |
| தேடுதல் | தேடு | தல் |
| செய்கை | செய் | கை |
| கொலை | கொல் | ஐ |
| மறதி | மற | தி |
| கேள்வி | கேள் | வி |
| கடவுள் | கட | உள் |

**91**. சில வினையாலணையும் பெயர்களின் உறுப்பிலக்கணம்:

| வி. அ. பெயர் | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| கற்றவர் | கல் | ற் | அர் |

| வி. அ. பெயர் | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| படிப்பவன் | படி | ப் | அன் |
| தேடினது | தேடு | இன் | து |
| போயின | போ | இன் | அ |
| பார்க்கின்றவள் | பார் | கின்று | அள் |

**92**. சில வினைமுற்றுக்களின் உறுப்பிலக்கணம்.—

| வினைமுற்று | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| சொல்லினன் | சொல் | இன் | அன் |
| துஞ்சுவார் | துஞ்சு | வ் | ஆர் |
| நிற்பல் | நில் | ப் | அல் |
| கேட்டேன் | கேள் | ட் | என் |
| செய்தாய் | செய் | த் | ஆய் |
| போவோம் | போ | வ் | ஓம் |

(இம்மூன்று உறுப்புக்களைத் தவிர பிறவும் உண்டு.)

## குறிப்பு வினை

**93**. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் இவற்றினடியாக வினைச் சொல்லும் பிறத்தல் உண்டு. அவை வினை முற்றுக்களாக வரலுங் கூடும். அவை காலத்தைக் குறிப்பாக உணர்த்தும். ஆதலின் அவைகள் குறிப்பு வினை முற்றுக்கள் என்று கூறப்படும்.

உதாரணம்

இவன் தந்தை பண்டு பொன்னன். இது பொருளடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று.

பாண்டியன் மதுரைப் பதியினன். இது இடத்தினடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

துருவன் சாலவுஞ் சிறிய பிராயத்தினன். இது காலத்தினடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று.

சிவன் மூன்று கண்ணன். இது சினையினடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

ஜியார்ஜ் அரசரே பெரியவர். இது குணத்தினடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

குதிரை மிக்க விரைவான நடையது. இது தொழிலடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

**94**. வேறு, இல்லை, உண்டு—இவை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றுக்கள்.

உ-ம். கடவுள் ஒருவர் உண்டு. நீ உண்டு, நான் உண்டு.
அவள், அவர், அது, அவை, உண்டு என்று முடிக்க.
அவன், அவள், அவர் அது, அவை வேறு ,,
நான் வேறு, நீ வேறு.

அவன், அவள், அவர், அது, அவை, இல்லை என முடிக்க. நீயும் இல்லை, நானும் இல்லை.

## பயிற்சி 8. வினைச்சொல்.

1. பகுதி, விகுதி இவைகளுக்கு வேறு என்ன பெயர்கள் இருக்கலாம்? ஏன்?

2. பகுதி, விகுதி, இடைநிலை—இவைகள் தனித்தனி உணர்த்துவது என்னை?

3. முக்காலங்களையும் உணர்த்தும் இடைநிலைகளைக் கூறுக.

4. போ, உண், நட — இவ்வினைப் பகுதிகளிலிருந்து பிறக்கும் தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்றுக்களைத் தருக.

5. பகுதிகள் புடைபெயர்ச்சியினால் அடையும் சில விகாரங்களைக் காட்டுக.

6. பெரிது, விழுந்தது — இவ்விரண்டு வினைமுற்றுக்களுக்கும் உள்ள பேதமென்ன?

7. ஐம்பால் படர்க்கை வினைமுற்றுக்களுக்குரிய விகுதிகள் எவ்வெவை என்று உதாரணத்தோடு தெரிவிக்க.

8. பகுதி, விகுதி, இடைநிலைகளாகப் பிரி:—ஓடினான், விற்றேன், கண்டாள், கேட்கின்றனள், நடப்பார், அனுப்பினர்.

9. கீழ்வருவனவற்றைச் சேர்த்து எழுதுக:—

கொய் + த் + ஆன், வெட்டு + இன் + அர், நட + கின்று + ஆர், ஓடு + கிறு + அ + து, கல் + ற் + ஆய், சொல் + இன் + ஆள், படி + ப் + ஆர், நட + கிறு + என், வா + த் + ஆன்.

10. கீழ்வரும் வினைமுற்றுக்களுக்குத் தெரிந்தவரையில் உறுப்பிலக்கணம் கூறு:

தந்தேன், வருகின்றாய், சொன்னது, ஓடின, விற்பான், விற்றார், மடிந்தோம்.

11. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்—இவற்றினடியாகப் பிறக்கும் வினைமுற்றுக்களுக்கு ஒவ்வொரு உதாரணங் காட்டுக.

12. நடந்தேன், செய்தாய், ஓடுவார் — இவைகளை வினையாலணையும் பெயர்களாகவும், வினைமுற்றுக்களாகவும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைக்க.

பெயர்பகுபதங்கள் ஐந்து எழுதி அவற்றிற்கு உறுப்பிலக்கணமுங் கூறுக.

## வினைச்சொல்லின் விகற்பங்கள்

### 1. வினையெச்சம்

**95.** வினை முற்றின் குறைவே வினையெச்சமாம். அது திணை, பால், இடம் காட்டும் விகுதிகளைப் பெறாது காலத்தை இடை நிலைகளால் காட்டி வினைமுற்றைக் கொண்டு முடியும்.

உதாரணம்

1. அறம் செய்து புகழ்பெற்றான்.

செய்து என்னும் வினையெச்சம்,

'செய்' என்னும் வினையடியாகப் பிறந்து.

த் என்னும் இறந்தகால இடைநிலை பெற்று,

'உ' என்னும் விகுதியை உடையதாகி,
'பெற்றான்' என்னும் வினைமுற்றைக்'கொண்டு முடிந்தது.
2. சிவன் சிரித்தல் செய்யத் திரிபுரங்களும் எரிந்தன.
செய்ய என்னும் வினையெச்சம்,
'செய்' என்னும் வினையடியாகப் பிறந்து,
'அ' என்னும் விகுதியை யுடையதாகி,
'செய்த உடனே' எனப் பொருள்பட்டு நிகழ்காலத்தைக் காட்டி,
'எரிந்தன்' என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

3. பாவம் செய்யின் நரகம் புகுவாய்.
செய்யின் என்னும் வினையெச்சம்,
'செய்' என்னும் வினையடியாகப் பிறந்து,
'இன்' என்னும் விகுதியை உடையதாகி,
'செய்தால்' எனப் பொருள்பட்டு, எதிர்காலத்தை உணர்த்தி,
'பெறுவாய்' என்ற வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

**96.** வினையெச்ச விகுதிகளும் அவ்வவற்றிற்குரிய வினையெச்சங்களும் வருமாறு:—

1. உ, இ, ய்—இறந்தகால வினையெச்ச விகுதிகள்.

| வினையெச்சம் | விகுதி | இடைநிலை |
|---|---|---|
| படித்து | உ | ஈண்டு விகுதியே காலங் காட்டும் |
| தேடி | இ | |
| போய் | ய் | |

2, அ—நிகழ்கால வினையெச்ச விகுதி.

| வினையெச்சம் | விகுதி | இடைநிலை |
|---|---|---|
| சொல்ல | அ | ஈண்டு விகுதியே காலங் காட்டும் |
| நடக்க | அ | |
| கூற | அ | |

3. இன், ஆல், கால்—எதிர்கால வினையெச்ச விகுதிகள்.

| வினை யெச்சம் | விகுதி | இடை நிலை |
|---|---|---|
| விடின் | இன் | ஈண்டு விகுதியே காலங் காட்டும். |
| வந்தால் | ஆல் | |
| நடந்தக்கால் | கால் | |

**97.** சூரியன் உதிக்க வந்தான். மழை பெய்ய நெல் விளைந்தது. நெல் விளைய மழை பெய்தது. } இவ்வகர ஈற்று வினையெச்சங்கள் முறையே முக்காலத்தையுங் காட்டின.

## குறிப்பு வினையெச்சம்

**98.** 'இராமன் மெல்ல நடந்தான்'. மெல்ல என்னும் குறிப்பு வினையெச்சம் 'நடந்தான்' என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

'அவன் இன்றி அணுவும் அசையாது'. 'இன்றி' என்னும் குறிப்பு வினையெச்சம் 'அசையாது' என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

## பெயரெச்சம்

**99.** வினைமுற்றின் குறைவே பெயரெச்சமுமாம்: ஆதலின், அது வினைமுற்றைப்போலன்றி, திணை, பால் காட்டக் கூடாத விகுதிகளைக் கொண்டும், காலத்தை இடைநிலைகளால் காட்டியும், பொருளாதி அறுவகைப் பெயர்களையும் கொண்டு முடியும். வினையடியாகப் பிறந்தாலும் இது பெயரைத் தழுவி முடியும் இயல்பினதால் பெயரெச்சம் எனப்பட்டது.

உ-ம். 1. இராமன் எடுத்த வில் பெரிது.
எடுத்த என்னும் பெயரெச்சமானது,
'எடு' என்னும் வினையடியாகப் பிறந்து,

'த்' என்னும் இறந்த கால இடைநிலை பெற்று,
'அ' என்னும் விகுதியை உடையதாகி,
'வில்' என்ற பொருட் பெயரைத் தழுவி முடிந்தது.

2. பிரமன் செய்கிற தொழில் சிருஷ்டிப்பு.

செய்கிற என்னும் பெயரெச்சமானது,
செய் என்னும் வினையடியாகப் பிறந்து,
கிறு என்னும் நிகழ்கால இடைநிலை பெற்று,
'அ' என்னும் விகுதியை உடையதாகி,
'தொழில்' என்னும் பெயரைத் தழுவி முடிந்தது.

3. பாயும் சிங்கம் பதுங்கி எழும்பும்.

பாயும் என்னும் பெயரெச்சமானது,
'பாய்' என்னும் வினையடியாகப் பிறந்து,
'உம்' என்னும் விகுதி ஏற்று,
'பாயப் போகும்' எனப் பொருள் பட்டு,
எதிர் காலம் உணர்த்தி,
சிங்கம் என்னும் பெயரைத் தழுவி முடிந்தது.
இங்கே 'உம்' என்ற விகுதியே காலத்தைக் காட்டும்.

## 100. குறிப்புப் பெயரெச்சம்

நல்ல பசு. நல்ல என்னும் குறிப்புப் பெயரெச்சம் 'பசு' என்னும் பெயரைத் தழுவி நின்றது.

வலிய நெஞ்சு: வலிய என்னும் குறிப்புப் பெயரெச்சம் 'நெஞ்சு' எனும் பெயரைத் தழுவி நின்றது.

நெடிய மால்: நெடிய எனும் குறிப்புப் பெயரெச்சம் 'மால்' என்னும் பெயரைத் தழுவி நின்றது.

**101.** நட, வா, கேள், இரு—இவ்வினைப் பகுதிகளினடியாகப் பிறக்கும் தெரிநிலைப் பெயரெச்ச வினையெச்சங்கள் முக்காலத்திலும் நிகழுமாறு:—

## தெரிநிலைப் பெயரெச்சம்

| பகுதி | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நட | நடந்த | நடக்கிற | நடக்கும் |
| வா | வந்த | வருகிற | வரும் |
| கேள் | கேட்ட | கேட்கிற | கேட்கும் |
| இரு | இருந்த | இருக்கிற | இருக்கும் |

## தெரிநிலை வினையெச்சம்

| | | | |
|---|---|---|---|
| நட | நடந்து | நடக்க | நடக்கின்<br>நடந்தால்<br>நடந்தக்கால் |
| வா | வந்து | வர | வரின்<br>வந்தால்<br>வந்தக்கால் |
| கேள் | கேட்டு | கேட்க | கேட்பின்<br>கேட்டால்<br>கேட்டக்கால் |
| இரு | இருந்து | இருக்க | இருப்பின்<br>இருந்தால<br>இருந்தக்கால் |

## எதிர்மறை உடன்பாடு (Negative & Affirmative)

**102.** எதிர்மறையாவது எதிர்மறுத்தல்: தொழில் நடவாமை அல்லது இல்லாமையைக் கூறுவது.

உடன்பாடாவது உடன்படுதல்: தொழில் நிகழ்ச்சிகளை உண்டு என்று கூறுவது.

உ-ம். வருவான் — உடன்பாட்டு வினைமுற்று
வரான் — எதிர்மறை ,,
ஓடி — உடன்பாட்டு வினையெச்சம்

| | | |
|---|---|---|
| ஓடாது | எதிர்மறை | வினையெச்சம் |
| இருக்கிற | உடன்பாட்டுப் பெயரெச்சம் | |
| இல்லாத | எதிர்மறை | ,, |
| இல்லா | ஈறுகெட்ட எதிர்மறை | |
| கற்றல் | உடன்பாட்டுத் தொழிற்பெயர் | |
| கல்லாமை<br>கற்காமை | எதிர்மறை | ,, |
| சொன்னவன் | உடன்பாட்டு வினை. அணை. பெயர் | |
| சொல்லாதவன் | எதிர்மறை | ,, |

வேவாய், சாகாய், நடவாய் முதலியன உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் பொருந்திய போது மொழிகள்.

உண்டு × இல்லை
போ × வா } இவை ஒன்றிற்கொன்று எதிர் பதங்கள்.

## எதிர்மறைச் சொற்கள் பிறக்குமாறு

**103**. பகுதிக்குப் பின் பெரும்பாலும் ஆ, அல், இல் முதலிய எதிர்மறை உறுப்புக்களை அல்லது விகுதிகளை ஏற்பதனல் எதிர்மறைச் சொற்கள் பிறக்கின்றன.

| உடன்பாடு | எதிர்மறை | எதிர்மறை விகுதி |
|---|---|---|
| கேட்டான் | கேட்டிலன் | இல் |
| அஞ்சுக | அஞ்சற்க | அல் |
| வாடின | வாடாத | ஆ |
| செய்கின்ருன் | செய்கின்றிலன் | இல் |
| போவான் | போகலன் | அல் |
| கூடி | கூடாது | ஆ |

**104**. சில சொற்களில் எதிர்மறை விகுதிகள் புணர்ந்து கெட்டு வருதலும் உண்டு. எனவே அவை உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் போதுவாதலும் உண்டு.

| உடன்பாடு | எதிர்மறை | |
|---|---|---|
| தாராய் | தாராய் | (தரமாட்டாய்) |
| கொளல் | கொளல் | (கொள்ளாதே) |
| சாவான் | சாவான் | (சாகமாட்டான்) |

## தன்வினை, பிறவினை

**105.** தன்னால் தொழில் நிகழ்தலைக் குறிப்பது தன்வினை.

பிறரால் தொழில் நிகழ்வித்தலைக் குறிப்பது பிறவினை.

உ-ம். நட, ஓடு, படித்தான், படித்து—தன்வினை
நடத்து, ஓட்டு, படிப்பித்தான், படிப்பித்து—பிறவினை

### **106.** பிறவினை உண்டாகும் விதங்கள்

**1.** பல தன்வினைப் பகுதிகள் **வி**, பி, கு, சு, டு, து, பு, று-என்ற விகுதிகளில் ஒன்றை யேற்றும் பிறவினைகளாகும்.

உதாரணம்.

| தன்வினைப்பகுதி | பிறவினை | பிறவினை விகுதி |
|---|---|---|
| வா | வருவி | வி |
| உண் | உண்பி | பி |
| போ | போக்கு | கு |
| பாய் | பாய்ச்சு | சு |
| உருள் | உருட்டு | டு |
| கட | கடத்து | து |
| எழு | எழுப்பு | பு |
| பயில் | பயிற்று | று |

**2.** சில பகுதிகளின் மெல்லெழுத்து வல்லெழுத்தாகிப் பிறவினையாகும்.

திருந்து—திருத்து
தோன்று—தோற்று } மெலி வலியாயின.

3. சில பகுதிகளின் ஈற்று வல்லெழுத்தின் ஒற்று இரட்டித்துவரப் பிறவினைகளாகும்.

| | | |
|---|---|---|
| உ-ம். உருகு | உருக்கு | ஒற்று இரட்டித்தன |
| ஆடு | ஆட்டு | |
| கூடு | கூட்டு | |

4. கரை, தேய் முதலிய பகுதிகள் இரண்டிற்கும் பொதுவாய் நிற்கும்.

| | |
|---|---|
| கரைந்தான் | கரைத்தான் |
| தேய்ந்தான் | தேய்த்தான் |

தமிழ்நாடு ... 600 008. 170495 TB P31(9) N31

## பயிற்சி 9. வினைச்சொல் (தொடர்ச்சி)

1. பெயரெச்சம், வினையெச்சம்—இவையிரண்டும் எவற்றினடியாகப் பிறக்கும் சொற்கள்? ஆயின், இவை வெவ்வேறு நாமம் கொண்ட காரணமென்ன ?

2. வினைமுற்றிற்கும் வினையெச்சத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன ?

3. வினை முற்றிற்கும் பெயரெச்சத்திற்கும் உள்ள ஒற்றுமை எவ்வளவில்?

4. ஓடின குதிரைகள் களைதீர்ந்த பின் மீண்டும் ஓடின - இதில் உள்ள ஓடின என்னும் பதங்களுக்கு எங்ஙனம் சொல்லிலக்கணம் கூறுவாய் ?

5. மேல் வாக்கியத்தில் குதிரைகள் என்ற எழுவாய்க்குப் பதிலாக மனிதர் என்ற எழுவாயைக் கொண்டால், ஓடின என்பது இரண்டிடத்தும் பொருந்துமா ? எப்பொழுதுதான் அது பொருந்தும்?

6. செய்யும் என்ற வினைமுற்று பெயரெச்சமாகவும், முற்றாகவும் நிற்கும்படி ஓர் வசனம் அமைக்க.

7. அடி, மிதி, உதை—இப்பகுதிகளினடியாகப் பிறக்கும் முக்காலப் பெயரெச்சங்களையும் எழுது.

8. காலங் குறிப்பாக மட்டும் காட்டுகிற சில பெயரெச்சங்கள் தருக. அவற்றிற்கு என்ன பெயர் வைக்கலாம்?

9. எதிர்காலப் பெயரெச்சத்திற்குக் காலங் காட்டும் இடைநிலை உண்டா?

10. இறந்த கால வினையெச்சங்களில் காலங் காட்டும் எவ்வெவ் விறந்தகால இடைநிலைகள் வரும்? உதாரணந் தருக.

12. கூடி, கொடுக்க, வரின்—இம் முக்கால வினையெச்சங்களில் காலங் காட்டும் இடைநிலைகள் வந்தனவா பார்?

13. எனவே இவற்றில் காலந் தெரிந்தவாறு என்?

14. நீ செய்யும் கணக்கு தப்பிதம். கடவுள் செய்யும் காரியங்களில் கடுகளவும் பிழை நேராது—ஈண்டுள்ள செய்யும் என்ற பெயரெச்சம் எவ்வெக் காலங்களைக் காட்டிற்று?

15. பெய்ய, விளைய, உதிக்க—இவை முக்காலங்களையும் உணர்த்துமாறு வாக்கியங்கள் எழுதுக.

16. எழுந்து, போய், தேடி, பெய்தால், கேட்க, நடக்கின், மேய்ந்த சாய்கிற, காயும் இவ்வெச்சங்களுக்கு உறுப்பிலக்கணம் கூறுக.

17. இடி, தடு, எறு, வாடு, கூ— இவ்வினைப் பகுதிகளினடியாகப் பிறக்கும் முக்கால வினை யெச்சங்களையும் தருக.

18. 5 வினையெச்சங்கள் அடங்கிய ஓர் வாக்கியம் வரைக.

19. ஓடாது, படிக்கின்றிலள், நாடி, தள்ளும், விட, கெட்ட, அழியாத பெரிய, அல்லாமல், அறிய, அரிய, அன்றி, உண்ணு, உடுத்து, கழிப்பான், போக்குவி, உண்பான், நடத்து—இவற்றின் சொல்லிலக்கணம் எவ்வெவ்வகை என்க.

20. கீழ்வரும் வாக்கியத்திலுள்ள வினை விகற்பச் சொற்களுக்கு இலக்கணம் (தெரிநிலை, குறிப்பு, உடன்பாடு எதிர்மறை, காலம், திணை, பால், இடம்) கவனித்து முடிவுடன் சொல்லு.

தேவர்கள் வெல்லாத இராவணனை இராமன் வென்று, அரிய புகழ் பூண்டு, சீதையை மீட்டு, அரக்கரை அழித்து, அயோத்தி அடைந்தான்.

# இடைச் சொல்

## 107. இடைச் சொல்லின் இலக்கணம்

பெயர் வினைகளைச் சார்ந்து, அவற்றின் முன்னும் பின்னும் நின்றும், தனித்துவராமல் அவற்றிடையில் தோன்றியும், பொருள் உணர்த்தும் சொல் இடைச்சொல்.

உ-ம். முற்பகல்—இங்கே முன் என்னும் இடைச் சொல் பெயரின் முன் வந்தது.

வந்தபின்— இங்கே பின் என்னும் இடைச்சொல் வினையின் பின் வந்தது.

ஒன்றேகால்—இங்கே ஏ என்னும் இடைச்சொல் 'ஒன்று,' 'கால்' என்னும் அளவுப் பெயர்களின் இடையில் வந்தது.

## 108. இடைச் சொற்களாவன:—

1. வேற்றுமை உருபுகள். 2. விகுதிகள். 3. இடை நிலைகள், 4. சாரியைகள், 5. உவமையுருபுகள், 6. சுட்டுவன, 7. வினப்பொருள் தருவன, 8. தத்தம் பொருள் உணர்த்துவன முதலியவாம்.

இவற்றுள் 1, 2, 3, 6, 7 முற்கூறப்பட்டன.

## 109. சாரியைகளாவன:—

ஓசை நலத்தின் பொருட்டுச் சொற்களுடே சார்ந்து வருபவை சாரியைகள். அவை:

அன், இன், அல், அற்று, அத்து, அம், ஏ, கு, ன், ஆம் முதலியன.

உதாரணம்.

| | | |
|---|---|---|
| படித்தனன் | அன் | சாரியை வந்தது. |
| வண்டினது கால் | இன் | ,, ,, |
| தொடையல் | அல் | ,, ,, |

| | | | |
|---|---|---|---|
| அவற்றை | அற்று சாரியை | வந்தது | |
| மரத்து | அத்து | ,, | ,, |
| நெஞ்சம் | அம் | ,, | ,, |
| ஒன்றேகால் | ஏ | ,, | ,, |
| செய்குவாய் | கு | ,, | ,, |
| கோன் | ன் | ,, | ,, |
| மண்ணுங்கட்டி | ஆம் | ,, | ,, |

**110**. உவமையுருபுகளாவன: போல, ஒப்ப, நேர, நிகர, அன்ன, அனைய, இன்ன, இனைய முதலியன.

**111.** தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்:—ஏ, ஓ, உம், மற்று, பிற, முன், பின், இனி, வாளா, சும்மா, கொல், ஐயோ, சீசீ, அம்மம்ம, என, என்று, தோறும் முதலியன.

இவற்றுள்:

| | | |
|---|---|---|
| முன், பின் | இடப்பொருள் காலப்பொருள் | உணர்த்தும். |
| ஐயோ | இரக்கப்பொருள் | ,, |
| சீ, சீ | இகழ்ச்சிப்பொருள் | ,, |
| அம்மம்ம | ஆச்சரியப் ,, | ,, |
| வாளா, சும்மா | பயனின்மைப்பொருள் | ,, |
| தோறும் | பன்மைப் ,, | ,, |

## உரிச்சொல்

**112**. உரிச்சொல்லாவது பெயர் வினைகளினின்று நீங்காது, அவற்றிற்கு உரிமைபூண்டு, அவற்றின் பண்பை விளக்கும் பொருளதாய் வரும்.

### உரிச்சொல்லின் வகைகள் இரண்டு

**113.** 1. ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள்: சால, உறு, தவ, நனி, கூர், கழி—இவை யாவும் மிகுதிப் பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்.

குரு, கெழு: இவை நிறம் எனும் பொருளை யுணர்த்தும் உரிச் சொற்கள்.

2. பல குணம் தழுவும் ஓர் உரிச்சோல்.

கடி—என்னும் உரிச்சொல், காப்பு, கூர்மை, அச்சம், விரைவு, புதுமை முதலிய பொருளது.

விழுமம்—சீர்மை, சிறப்பு, துன்பம் முதலிய பொருளது.

பயிற்சி **10** (இடைச்சோல், உரிச்சோல்)

1. இடைச்சொல்லின் இலக்கணம் யாது?

2. இடைச்சொல்லாக வருபவை எவ்வெவை?

3. சாரியைகள் எவ்வெவை?

4. வந்தனன், வண்டின்கால், இதனை—இதில் உள்ள சாரியைகள் எவை?

5. சாரியையுள்ள வேறு ஐந்து சொற்கள் தருக.

6. அவனும் இவனும் கூடினால், உவனை வெல்லல் எளிது—இதிலுள்ள இடைச்சொற்களை எடுத்தெழுது.

7. உரிச்சொல்லின் இலக்கணம் யாது?

8. பெரிய பையன், நனி சிறியன்—பெரிய, நனி இவை என்ன சொற்கள்.

9. தமிழ்ச் சொற்களில் நால்வகைகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் ஐந்தைந்து உதாரணம் வேண்டும்.

## III புணரியல் (Combination of Letters)

**114**. முதல் நின்ற மொழியின் ஈற்றெழுத்தோடு அடுத்து வரும் மொழியின் முதல் எழுத்து இயல்பாகவோ விகார முற்றோ ஒன்றுபடப் புணர்வது புணர்ச்சியாம்.

**115.** புணர்ச்சியின் பொருட்டு முதலில் நிலைநின்ற மொழி நிலைமொழி. புணர்ச்சியை வேண்டி அதனை அடுத்து வந்து சேரும் மொழி வருமொழி.

**116** புணர்ச்சி இரு வகைப்படும். அவை,

1. இயல்புப் புணர்ச்சி, 2. விகாரப் புணர்ச்சி.

**117.** நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் விகாரப் படாமல் தம் இயல்பில் நின்றே புணர்ந்துகொள்வது இயல்புப் புணர்ச்சியாம்.

உதாரணம்

| நிலைமொழி | | வருமொழி | | புணருமாறு |
|---|---|---|---|---|
| கை | + | வை | = | கை வை |
| மண் | + | வீடு | = | மண் வீடு |
| மரம் | + | விழுந்தது | = | மரம் விழுந்தது |
| வந்த | + | மனிதன் | = | வந்த மனிதன் |
| அவன் | + | வந்தான் | = | அவன் வந்தான் |

**118.** நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் தம்முள் புணரும்போது பல மாறுதல்களை அல்லது விகாரங்களை ஏற்றுப் புணர்ந்து நிற்பது விகாரப் புணர்ச்சியாம்.

அவ்விகாரங்கள்,

தோன்றல்,
திரிதல்,
கெடுதல்,

என மூவகைத்து.

உதாரணம்.

மா + பழம் = மாம்பழம் — தோன்றல் விகாரம்.
'ம்' தோன்றினது.

கல் + மலை = கன்மலை — திரிதல் விகாரம்.
'ல்' 'ன்' ஆகத் திரிந்தது

மரம் + வேர் = மரவேர் — கெடுதல் விகாரம்.
'ம்' கெட்டது.

**119.** இம்மூன்று விகாரங்களுக்கும் உதாரணங்கள் வருமாறு:—

| 1. | தோன்றல் விகாரம் | | |
|---|---|---|---|
| நிலைமொழி | வருமொழி | புணர்மொழி | தோன்றும் விகார எழுத்து |
| வாழை | பழம் | வாழைப்பழம் | ப் |
| வினை | பெயர் | வினைப்பெயர் | ப் |
| கையை | கொடு | கையைக்கொடு | க் |
| பையை | தா | பையைத்தா | த் |
| **2.** | **திரிதல் விகாரம்** | | **திரியும் விகார எழுத்து** |
| பழம் | தின்றான் | பழந்தின்றான் | ந் |
| தனம் | கொடு | தனங்கொடு | ங் |
| மரம் | சாய்ந்தது | மரஞ்சாய்ந்தது | ஞ் |
| பழம் | சுவை | பழச்சுவை | ச் |
| **3.** | **கெடுதல் விகாரம்** | | **கெடுதலான எழுத்து** |
| மரம் | நார் | மரநார் | ம் |
| நிலம் | வளம் | நிலவளம் | ம் |
| குளம் | மீன் | குளமீன் | ம் |
| உளம் | மகிழ்ச்சி | உளமகிழ்ச்சி | ம் |

**120** புணர்ச்சி யியல்: புணரும் எழுத்துக்களின் வகை நோக்கி இரு பிரிவாகப் பிரிக்கப்படும்.

**1.** உயிரோடு உயிர் புணர்தல்:— மணி + அழகு.

உயிரோடு மெய் புணர்தல்:— மணி + பெரியது.

இத்தகைய பதங்களின் புணர்ச்சிமுறை கூறுவது உயிரீற்றுப் புணரியலாம்.

2. மெய்யோடு மெய் புணர்தல்:— நிலம் + வலிது.

மெய்யோடு உயிர் புணர்தல்:— நிலம் + அழகிது.

இத்தகைய பதங்களின் புணர்ச்சி முறை கூறுவது மெய்யீற்றுப் புணரியல்.

### உயிரிற்றுப் புணரியல்

**121**. உயிரோடு உயிர் புணர்தற்குப் பொதுவிதி: நிலைமொழி ஈற்றின் உயிரும், வருமொழி முதலின் உயிரும் புணரவரின், உயிரோடு உயிர் புணர்தற்கு இயலாதாகலானும், உயிரோடு மெய்யே ஒன்றுதல் இயல்பாதலானும், அவ்விரண்டு உயிர்களுக்கும் இடையில் ஒரு மெய் தோன்றி, வருமொழி முதல் உயிரோடு உடன்பட்டு, நிலைமொழி ஈற்று உயிரைப் புணர்விக்கும். ஆதலின் அந்த மெய் உடம்படுமெய் எனப் பெயர் பெறும். அங்ஙனம் உடம்படுத்தும் மெய்கள் யகரமும் வகரமுமாம். அவை முறையே யகர உடம்படுமெய், வகர உடம்படுமெய் என்று சொல்லப்படும்.

உதாரணம்—யகர உடம்படு மெய்:—

மணி + அழகு = மண் + இ + அழகு = மணியழகு. நிலைமொழி ஈற்று உயர் இ—வரு மொழி முதல் உயிர் 'அ'. இ, அ, உயிர்களுக்கு இடையில் தோன்றிய உடம்படு மெய் 'ய்'. எனவே மணி + ய் + அழகு என நிற்க, யகர மெய்யின்மேல் அகர உயிர்

ஏற, 'ய' என்னும் உயிர் மெய் உடன்பாடாக, மணியழகு எனப் புணர்ந்து நின்றது.

அவ்வாறே,

தீ + அழகு=தீயழகு, தலை + அழகு=தலையழகு என்றும் வரும்.

உதாரணம்—வகர உடம்படுமெய்:—

பூ + அழகு=பூவழகு. ப் + ஊ + அழகு. நிலை மொழி ஈற்று உயிர் ஊ. வரு மொழி முதல் உயிர் 'அ'. ஊ, அ, உயிர்களுக்கு இடையில்தோன்றிய உடம்படுமெய் 'வ்'. எனவே பூ + வ் + அழகு என நிற்க, வகர மெய்யின்மேல் அகர உயிர் ஏற, 'வ' என்னும் உயிர் மெய் உடன்பாடாக, பூவழகு எனப் புணர்ந்து நின்றது.

அவ்வாறே,

விள + அழகு=விள வழகு.
பலா + அழகு=பலா வழகு.
வடு + அதிசம்=வடுவதிசம்.
சோ + அரண்=சோவரண்.—என வரும்.

**122.** நிலை மொழியீற்றில் ஏகாரம் வந்து வருமொழி முதல் உயிரோடு புணருங்கால், யகர, வகர உடம்படு மெய்கள் இரண்டும் தோன்றும்.

சே + அழகு=சேயழகு, சேவழகு.
சே + அடி=சேயடி, சேவடி.

**123.** இதனாற் பெறப்படும் விதியாவது :—

**இ, ஈ, ஐ வழி யவ்வும்,**
**ஏனை உயிர் வழி வவ்வும்,**
**ஏ முன் இருமையும்,**
**உயிர்வரின் உடம்படுமெய் என்றாகும்.**

**124.** நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் வரு மொழி முதல் உயிரோடு புணருங்கால், அக் குற்றியலு

கரத்தின் உகரங்கெட்டு, மெய் தனித்திருக்க, அம்மெய்யின்மீது உயிர் இசைந்து புணராநிற்கும்.

உ - ம். வரகு + அருமை = வரகருமை,
படகு + அழகு = படகழகு.

**125**. நிலைமொழியீற்று உயிர் வருமொழி முதலில் உள்ள வல்லெழுத்துக்களோடு புணருங்கால், அவ்வல்லெழுத்துக்கள் மிக்கு வரும். சிறுபான்மை இயல்பாகும்.

ஆட + சென்றான் = ஆடச் சென்றான் —'ச்' மிக்கது.
பத்து + தலை = பத்துத் தலை—'த்' ,,
தேடி + பார்த்தான்—தேடிப் பார்த்தான்—'ப்',,
எடுத்து + கொண்டான் = எடுத்துக் கொண்டான்-'க்',,

மலை + கிழவோன் = மலை கிழவோன்
செடி + கொடி = செடி கொடி
எழு + தலைகள் = எழு தலைகள்
} இயல்பாயின.

**126**. பல, சில எனும் மொழிகள் தம்மோடும் பிறிதோடும் புணரும் முறை:—

பல + பல = பலப்பல, பலபல, பற்பல.
சில + சில + சிலச்சில, சிலசில, சிற்சில.
பல + கலை = பலகலை, பல்கலை.
பல + நாள் = பல நாள், பன்னாள்.
சில + மதி = சில மதி, சின்மதி.
சில + நாள் = சில நாள், சின்னாள்.

**127**. நிலைமொழி ஈற்றுக் குற்றியலுகரம் வருமொழி முதல் மெய்களோடு புணரும் வகைகள்:—

வரகு + சிறிது = வரகு சிறிது—இயல்பு.
ஆடு + கால் = ஆட்டுக்கால்—'ட' ஒற்று இரட்டித்தது.
வயிறு + பசி = வயிற்றுப்பசி—'ற' ஒற்று இரட்டித்தது.

இரும்பு + வலிமை = இருப்பு வலிமை
கன்று + ஆ = கற்ரு
நஞ்சு + பொய்கை = நச்சுப் பொய்கை
} மென்றொடர் வன்றொடராயது.

**128.** சில ஐகார ஈற்றுச் சொற்கள் வருமொழி முதலோடு புணருமாறு:—

தென்னை + தோப்பு = தென்னந்தோப்பு.
தாழை + பூ = தாழம் பூ.
பனை + காய் = பனங்காய்.
} 'ஐ' கெட 'அம்' சாரியை பெற்றது.

மெய் யீற்றுப் புணரியல்

**129.** நிலைமொழி யீற்றுமெய் வருமொழி முதல் உயிரோடு புணரும்போது, மெய்க்கும் உயிருக்கும் இடையிட்ட இயல்பின்படி, மெய்ம்மேல் உயிர் வந்து ஒன்றிப் புணரும்.

புகழ் + அழகு = புகழழகு—ழ் + அ = ழ.
வேல் + எறி—வேலெறி —ல் + எ = லெ.
பழம் + இது = பழமிது —ம் + இ = மி.

**130.** தனிக்குறில் ஒற்றோடு உயிர் புணரின், நிலைமொழியீற்றில் தனித்த குற்றெழுத்தை யடுத்து நின்ற மெய், வருமொழி முதலில் உயிர் வந்தால், இரட்டித்து நிற்கும்.

பொன்—இது தனிக்குறில் சார்ந்த ஈரெழுத்துப் பதம். இதனோடு உயிர் முதலாக உடைய 'அணி' எனும் பதம் புணரவேண்டின், பொன் + அணி = பொன் + ன் + அணி என 'ன்' இரட்டித்து வர, இரட்டித்த 'ன்' ஆகிய மெய்யில் அகர உயிர் இசைய, ன் + அ = ன என நிற்ப, பொன் + னணி = பொன்னணி, எனப் புணரும்.

மண் + அருமை = மண்ணருமை
விண் + உலகம் = விண்ணுலகம்
கண் + இலான் = கண்ணிலான்
கல் + எறி = கல்லெறி

**131.** நிலை மொழியீற்று ணகர னகரங்கள், வருமொழி முதலில் வல்லினம் வரின், அவை சில விடத்தில், ட, ற ஆகும்; சில விடத்தில் இயல்பாகும்.

| | |
|---|---|
| பொன் + தகடு = பொற்றகடு | 'த' வர 'ன்'—'ற்' ஆனது |
| கண் + கடை = கட்கடை | 'க' வர 'ண்'—'ட்' ஆனது |
| மண் + மாட்சி = மண்மாட்சி<br>தண் + பெரிது = தண்பெரிது | இயல்பாயின |

**132.** நிலைமொழியீற்று மகரமெய், வருமொழி முதல் உயிர், வலி, மெலி, இடை ஆகிய நான்கோடும் புணருமாறு:—

**1.** உயிர் வரின், மகர ஈறு கெட, இயல்பாக உயிர்கள் சேர்வதை போல், வகர உடம்படுமெய் தோன்றப் புணரும்:—

வட்டம் + ஆழி = வட்ட + வ் + ஆழி = வட்டவாழி
புறம் + அழகு = புற + வ் + அழகு = புறவழகு
மரம் + அடி = மர + வ் + அடி = மரவடி

**2.** வல்லினம் வரின், மகர ஈறுகெட வல்லினம் இரட்டிக்கும், அல்லது இனமெல்லெழுத்தாகத் திரியும்.

| | |
|---|---|
| வட்டம் + கல் = வட்ட + க் + கல் = வட்டக்கல்<br>மரம் + கிளை = மர + க் + கிளை = மரக்கிளை | வலி இரட்டித்தது |
| மரம் + சிறிது = மர + ஞ் + சிறிது = மரஞ்சிறிது<br>பழம் + தா = பழ + ங் + தா = பழந்தா | மகரம் ஞ், ந், ஆனது |

**3.** மெல்லினம் வர மகர ஈறு மாத்திரம் கெடும்.

மரம் + நாய் = மரநாய்
வட்டம் + நேமி = வட்டநேமி

**4.** இடையினம் வர மகர ஈறுமட்டும் கெடும்.

வட்டம் + வாரி = வட்டவாரி
மரம் + வேர் = மரவேர்

**133.** சில லகர ளகர, மெய்யீற்றுப் பதங்கள் வருமொழி முதலோடு புணரு முறை:—

| | |
|---|---|
| கால் + குறை = காற்குறை<br>கால் + குறிது = காற்குறிது<br>பல் + தலை = பஃறலை | வல்லினத்தாலடைந்த விகாரங்கள் |
| நல் + நெறி = நன்னெறி<br>கல் + மலை = கன்மலை | மெல்லினத்தால் பெற்ற விகாரங்கள் |
| கல் + யானை = கல்யானை<br>கால் + யாப்பு = காலியாப்பு | இடையினத்தால் வந்த விகாரங்கள் |
| முள் + கிரீடம் = முட்கிரீடம்<br>எள் + பூ = எட்பூ<br>தாள் + துணை = தாடுணை | வல்லினத்தால் வந்த விகாரங்கள் |
| வாள் + மாண்டது = வாண்மாண்டது<br>உள் + நகர் = உண்ணகர் | மெல்லினத்தால் எய்திய விகாரங்கள் |
| தோள் + வலிமை = தோள்வலிமை<br>தாள் + யாது = தாளியாது | இடையினத்தால் எய்திய விகாரங்கள் |

## புணரியல் போது

**134.** நிலை மொழி யீற்று உயிரோடும் மெய்யோடும் மெலி, வலி வருமொழி முதலில் வந்து புணருமாறு :—

**1.** ஞ, ந, ம, ய, வ-வரின் இயல்பாகும்.

இள + ஞாயிறு = இளஞாயிறு.
பனை + நீண்டது = பனை நீண்டது.
பொன் + மெலிது = பொன் மெலிது.
மான் + வலிது = மான் வலிது.
பூ + யாது = பூ யாது.

2. குற்றெழுத்தை யடுத்து யகர ஒற்றும், தனி 'ஐ' யும் நிலைமொழி ஈறாக வரின், மெலி மிகும்.

மெய் + மாட்சி = மெய்ம்மாட்சி.
பொய் + மயிர் = பொய்ம்மயிர்.

மெய் + நீண்டது = மெய்ந்நீண்டது.
பொய் + நின்றது = பொய்ந்நின்றது.
கை + மாறு = கைம்மாறு.
கை + நிலை = கைந்நிலை.
கை + நீண்டது = கைந்நீண்டது.
மை + நலம் = மைந்நலம்.

**135.** சில உயர்திணைப் பெயர்கள், பொதுப்பெயர்கள் நிலை மொழிகளாய் நின்று புணருமாறு:—

நம்பி + சிறியன் = நம்பி சிறியன்.
கொற்றன் + பெரியன் = கொற்றன் பெரியன்.
சேய் + சிறிது = சேய் சிறிது.
அவன் + தலை = அவன் தலை.
} வல்லினம் வர இயல்பாயின.

பிள்ளை + சிறியன் = பிள்ளை சிறியன்.
நீ + தா = நீ தா.
நீர் + படிமின் = நீர் படிமின்.
மாந்தர் + தொழில் = மாந்தர் தொழில்.
} இயல்பாயின.

இயல்பாகாமல் விகாரப்பட்டு வருமாறு

அரசன் + வள்ளல் = அரச வள்ளல்.
நளன் + வெண்பா = நளவெண்பா
சோழன் + அரசன் = சோழவரசன்.
கம்பர் + ராமாயணம் = கம்ப ராமாயணம்.

**136.** பண்புப் பெயர்கள் புணருமாறு.

பண்புப் பெயர்கள் நிலை மொழிகளாய் நின்று வருமொழி முதலோடு புணருங்கால், ஒரோ விடத்து,

1. ஈறு போகும்.
2. இடையுகரம் இ ஆகும்.
3. ஆதி நீளும்.
4. அடியகரம் ஐ ஆகும்.

5. தன்னொற்று இரட்டும்.
6. முன்னின்ற மெய் திரியும்.

### உதாரணம்.

1. சிறுமை + பொருள் = சிறு பொருள்
கருமை + நாகம் = கரு நாகம் } ஈறு கெட்டது.

2. வறுமை + அன் = வறியன்.
கருமை + அன் = கரியன். } ஈறு கெட்டு, இடை உகரம் இ ஆனது.

3. முதுமை + ஊர் = மூதூர்.
பசுமை + இலை = பாசிலை.
சிறுமை + அடி = சீறடி. } ஆதி நீண்டது.

4. பசுமை + தலை = பைந்தலை.
பசுமை + கதிர் = பைங்கதிர்.
பசுமை + கூழ் = பைங்கூழ். } அடி அகரம் ஐ ஆனது.

5. நடுமை + ஆறு = நட்டாறு.
சிறுமை + எலி = சிற்றெலி. } தன் ஒற்று இரட்டினது.

6. வெம்மை + உயிர் = வெவ்வுயிர்
செம்மை + வாய் = செய்யவாய் } முன்னின்ற மெய் திரிந்தது.

### பயிற்சி 11 புணர்ச்சி

1. சே ஏறு பெருமான், மா ஊது மலர், கோ ஏறு கழுதை-இச் சொற்றொடர்களை விரைவாக உச்சரித்துப் புணர்த்துகையில், இடையில் தோன்றும் உடம்படு மெய் யாது?

2. நாவூறல், கோவில், தேவாரம், போனவிடம்--இவற்றைப் பிரித்து எழுதி, இடையில் எந்த உடம்படுமெய் வந்ததென்று கண்டு பிடி.

3. அவ்வூர், எவ் யானை, உயர்வானம்—இவற்றில் வந்த மெய் உடன்படுமெய் யாமா? ஏன்?

4. மணி அடி, ஈ இறகு, குதிரை எற்றம்—இவைகளை விரைவாக உச்சரித்துப் புணர்த்தி, இடையில் தோன்றும் உடம்படுமெய் யாதென்று பார்.

5. கிளி யழகு, தீ யெரிந்தது, பூனை யெது—இவற்றில் வந்த உடம்படு மெய் எது ?

6. உடம்படு மெய் எத்தனை ? இதன் பெயர்க்காரணம் கூறு.

7. சிறகு + ஒடிந்தது, பந்து + எறி, விறகு + அருமை--இவை புணருமாறு என் ?

8. உயிர் வரின் உக்குறள் மெய்விட்டு ஓடுதற்கு வேறு சில உதாரணங்கள் கூறு.

9. காடு + அரண், வயிறு + கழலை—இவைகளைப் புணர்த்திக் காட்டு.

10. பல, சில தம்முன் தாம்வரின் எவ்வாறு சேரும்.

11. உடல்மேல் உயிர்வந்து ஒன்றிப் புணர்தலைச் சில உதாரணங்களால் காட்டுக.

12. மகர ஒற்றுக் கெட்டுப் புணர்தற்கான சில சொற்றொடர்கள் கூறுக.

13. லகர ளகரங்கள் திரிதற்கும் வல்லெழுத்துக்கள் தோன்றற்கும் சில உதாரணங்கள் தேவை.

14. இயல்புப் புணர்ச்சிக்குச் சில உதாரணங்கள் தருக.

15. பண்புப் பெயர் எவ்வெவ்வாறு விகாரமடைந்து புணரும் ?

## IV. பொதுவியல்

### திசைச்சொல்

**134.** நாற்றிசையிலுமுள்ள பிற பாஷைகளிலிருந்து தமிழிற் புகுந்து வழங்குஞ் சொற்கள் திசைச்சொல் லாகும். இராஜீயச் சேர்க்கையாலும், வியாபாரக் கூட்டுறவாலும், பிற பாஷைக்காரரது மொழிகள் தமிழோடு வந்து கலந்து வழக்காற்றில் புகுந்தன இப்பெயரான் அழைக்கப்படும்.

உதாரணம்

| | | | திசைச்சொல் | தமிழ்ச்சொல். |
|---|---|---|---|---|
| சீத நாட்டுச் | (Nilgris) | சொல்: | எலுவன் | தோழன். |
| மலே ,, | (Malabar) | ,, | வெள்ளம் | நீர். |
| துட்ட ,, | (Kerala) | ,, | தள்ளே | தாய். |
| தெலுங்கு | (Andhra) | ,, | செப்பு | சொல். |
| சிங்கள ,, | (Ceylon) | ,, | அந்தோ | ஐயோ. |
| இங்லண்டு | (England) | ,, | ஆர்டர் | உத்தரவு. |
| இந்துஸ்தானி | (Hindustani) | | தீவான் | அமைச்சன். |

## வடசொல் (Sanskrit Word)

**135.** ஆதியில் இந்தியாவின் வடபாகத்தில் வழக்காற்றிலிருந்து, வடமொழி எனப் பெயர் வாய்ந்த சம்ஸ்க்ருதத்திலிருந்து செந்தமிழிற் புகுந்துலவுஞ் சொல் வடசொல்லாகும். இது பெரும்பாலும் வடமொழியாளரோடுற்ற மார்க்க சம்பந்தத்தினால் புகுந்தனவாகும்.

| வடமொழி | தமிழ்மொழி |
|---|---|
| கமலம் | தாமரை |
| காரணம் | ஏது |
| ஜலம் | நீர் |
| தேசம் | நாடு |

**136.** சில வடமொழிப் பதங்கள் புணருமாறு:—

சிவ + ஆலயம்=சிவாலயம்.

சதா + ஆனந்தன்=சதானந்தன்.

கிரி + ஈசன் =கிரீசன்.

குரு + உபதேசம்=குரூபதேசம்.

தேவ + இந்திரன்=தேவேந்திரன்.

சூரிய + உதயம்=சூரியோதயம்.

சர்வ + ஐஸ்வரியம் = சர்வைஸ்வரியம்.
திவ்ய + ஔஷதம் = திவ்யௌஷதம்.

### பயிற்சி 12 (திசை, வடசொற்கள்)

1. திசைச் சொல் என்பது என்ன ?

2. வடசொல் திசைச் சொல்லோடு அடங்காதோ ?

3. ஆறு திசைச் சொற்கள் உரைக்க?

4. பின்வரும் திசைச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள் வேண்டும்:—

தள்ளை, செப்பு, சிக்குதல், வெள்ளம், பந்தோபஸ்து, உஷார், கிழார், எலுவன், இருளை, எச்சரிக்கை, ஆர்டர், அலமாரி.

5. வட சொல் என்றால் என்ன ?

6. வடசொற்கள் எவ்வாறு தமிழில் வழங்கலாயின ?

7. இவ்வட சொற்களுக்குச் சரியான தமிழ்ப்பதம் கூறுக:-

பங்கஜம், கிருஷ்ணன், பருப்பதம், ஜயம், காரணம், நகம், ஜலம், சமுத்திரம், தர்மம்.

8. கீழ்வரும் வடசொற்களைத் திருத்தி எழுது:—

கஸ்டம், புஸ்பம், ஜாமான், நஸ்டம், தோஸம், ஸண்முகம்.

9. இலக்கணம் கற்பதனால் விளையும் பயன் யாது ?

முற்றிற்று.

---

அகத்திய ரடிக்கோ ரழகிய வணியாய்
இகத்தி லிதனை யேத்திப் புனைவோம்.

அநுபந்தம்

# நன்னூல் சூத்திரங்கள்

## I. எழுத்தியல்

### முதல் எழுத்து

1. உயிரும் உடம்புமாம் முப்பது முதலே. 59

### உயிர்மெய் எழுத்துக்கள்

2. அம்முதல் ஈராறு ஆவி, கம்முதல்
மெய்ம்மூவாறு என விளம்பினர் புலவர். 63

### குற்றிய லிகரம்

3. யகரம்வரக் குறள் உதிரி இகரமும்
அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய. 93

### குற்றிய லுகரம்

4. நெடிலோடு ஆய்தம், உயிர், வலி, மெலி இடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே. 94

## II. சொல்லியல்

### பெயர்ச் சொல்

### பெயரின் பொது விலக்கணம்

5. இடுகுறி காரணம் மரபொடு ஆக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்று
வேற்றுமைக் கிடனாய்த் திணைபால் இடத்து ஒன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே. 275

### இருதிணை

6. மக்கள் தேவர் நரகர் உயர்திணை;
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை. 261

### ஐம்பால்

7. ஆண், பெண், பலர் என முப்பாற்று உயர்திணை;
ஒன்றே பல என்று இருபாற்று அஃறிணை. 262,263

### மூவிடப் பெயர்கள்

8. தன்மை யான், நான், யாம், நாம் ; முன்னிலை
எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ ;
அல்லன படர்க்கை எல்லாம் எனல் பொது. 285

### வேற்றுமை

9. ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறுய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை 291

### வேற்றுமைப் பெயர் முறை

10. பெயரே, ஐ, ஆல், கு, இன், அது, கண்
விளியென்று ஆகும் அவற்றின் பெயர்முறை. 292

## வினைச் சொல்

### தெரிநிலைப் பகுதிகள்

11. நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை,
நொ, போ, வெள, உரிஞ், உண், பொரும், திரும், தின்,
தேய், பால், செல், வவ், வாழ், கேள், அஃகு, என்று
எய்திய இருபான் மூன்றும் ஈற்றவும்
செய் என் ஏவல் வினைப்பகாப் பதமே. 137

### ஐம்பால் படர்க்கை விகுதிகள்

12. 1. அன், ஆன், இறுமொழி ஆண்பால் படர்க்கை.

2. அள், ஆள் இறுமொழி பெண்பால் படர்க்கை.

3. அர், ஆர், பவ்வூர் அகரம், மார் ஈற்ற
பல்லோர் படர்க்கை, வினையொடு முடிமே.

4. து, று, டு குற்றியலுகர ஈற்ற
ஒன்றன் படர்க்கை; டு குறிப்பினுகும்.

5. அ, ஆ ஈற்ற பலவின் படர்க்கை.
ஆவே எதிர்மறைக் கண்ணதாகும். 325, 329

## இறந்தகால இடைநிலை

13. த, ட, ற ஒற்று, இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தரும் தொழில் இடைநிலை. 142

## நிகழ்கால இடைநிலை

14. ஆநின்று, கின்று, கிறு மூவிடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை யிடைநிலை 143

## எதிர்கால இடைநிலை

15. ப, வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை யிடைநிலை யாமிவை சில வில 144

## தன்வினை, பிறவினை

16. செய்யென் வினைவழி வி, பி, தனிவரில்
செய்வி என்னேவல், இணையின் ஈரேவல். 138

## பெயரெச்சம்

17. செய்த, செய்கின்ற, செய்யும் என்பாட்டில்
காலமுஞ் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வது ஆதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச்சம்மே. 340

## வினையெச்சம்

18. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச்சம்மே. 342

### இடைச்சொல்

19. வேற்றுமை, வினை, சாரியை, ஒப்பு உருபுகள்,
தத்தம் பொருள், இசைநிறை, அசைநிலை,
குறிப்பு, என் எண் பகுதியில், தனித்தியலின்றி,
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல். 420

### உரிச்சொல்

20. பல்வகைப் பண்பும் பகர்பெயராகி
ஒரு குணம், பல குணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல். 442

## III. புணரியல்

### உயிர்முன் உயிர் புணர்தல்

21. இ, ஈ, ஐ வழி யவ்வும், ஏனை
உயிர்வழி வவ்வும், ஏ முன் இவ்விருமையும்,
உயிர்வரின் உடம்படுமெய் என்றாகும். 162

### குற்றியல் முற்றியல் உகரங்கள் முன் உயிர்

22. உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்,
யவ்வரின் இய்யாம், முற்றும் அற்று ஒரோவழி 164

### உயிர்முன் வல்லினம் புணர்தல்

23. இயல்பினும், விதியினும், நின்ற உயிர்முன்
க, ச, த, ப மிகும், விதவாதன மன்னே. 165

### சில குற்றியலுகரம் புணர்முறை

24. நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்
ட, ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே. 183

### மெய்ம்முன் உயிர் புணர்தல்

25. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. 204
தனிக்குறில் முன் ஒற்றுயிர்வரின் இரட்டும். 205

### மகரவீற்றுப் புணர்ச்சி

26. மவ்வீற்று ஒற்று அழிந்து உயிர் ஈறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும். 219

### பண்புப் பெயர்கள்

27. செம்மை, சிறுமை, சேய்மை, தீமை,
வெம்மை, புதுமை, மென்மை, மேன்மை,
திண்மை, உண்மை, நுண்மை, இவற்று எதிர்
இன்னவும் பண்பில் பகாநிலைப் பதமே. 135

### பண்புப் பெயர் விகாரங்கள்

28. ஈறு போதல், இடை உகரம் 'இ' ஆதல்
ஆதி நீடல், அடி அகரம் 'ஐ' ஆதல்,
தன்னொற்று இரட்டல், முன்னின்ற மெய் திரிதல்,
இனம் மிகல்--இனையவும் பண்பிற்கு இயல்பே. 136

## IV. பொதுவியல்

### திசைச் சொல்

29. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தும்
ஒன்பதிற்று இரண்டினில் தமிழ் மொழி நிலத்தினும்
தம் குறிப்பினவே திசைச் சொல் என்ப. 273

### வட சொல்

30. பொது எழுத்தானும், சிறப் பெழுத்தானும்
ஈரெழுத்தானும் இயைவன வடசொல். 274

---

## நான்காம் பாரத்துக்கு எஸ். எஸ். எல். ஸி. போர்டார் புதிதாகத் தயாரித்துள்ள இலக்கண பாடதிட்டம்

### I. எழுத்து.

1. முதலெழுத்து, சார்பெழுத்து.
2. உயிரெழுத்தின் வகைகள்: குற்றெழுத்து, நெட்டெழுத்து, விஞ எழுத்து.
   மெய்யெழுத்தின் வகைகள்: வல்லினம், மெல்லினம், இடையினம்.
3. உயிர் மெய்யெழுத்து. 4. ஆய்த எழுத்து.
5. குற்றியலுகரம். 6. குற்றியலிகரம். 7. போலி.

### II. சொல்: பெயர்ச்சொல்.

1. சொல்லின் வகைகள்: பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், வடசொல், திசைச்சொல்.
2. காரணப்பெயர்—இடுகுறிப்பெயர்.
3. பலவகைப் பெயர்ச்சொற்கள்:—பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர், வினையாலணையும்பெயர், கிளைப்பெயர், ஜாதிப்பெயர், அளவுப்பெயர், தன்மைப்பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப்பெயர்; 'தாம்', 'தான்', 'எல்லாம்',—இப்பொதுப் பெயர்கள்.
4. திணை, பால், எண், இடம், வேற்றுமை (வேற்றுமைப் பொருள் வேண்டா).
5. வேற்றுமையுருபு எற்கும்போது வேறுபடும் பெயர்கள், 'தான்' என்பது 'தன்' என்றாதல்போல.

### வினைச் சொல்.

1. பகுதி, விகுதி, இடைநிலைகள்.
2. காலம்: இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.
3. தன்வினை, பிறவினை.
4. பெயரெச்சம், வினையெச்சம், எதிர்மறைப்பெயரெச்சம், எதிர்மறை வினையெச்சம்.

### இடைச்சொல், உரிச்சொல்

1. இடைச்சொல் இன்னதென்பது.
2. உரிச்சொல் இன்னதென்பது.

### III. புணரியல்.

1. நிலைமொழி, வருமொழி.
2. இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி.
3. புணர்ச்சியில் முக்கியமாக மிகுபவைகள், கெடுபவைகள், திரிபவைகள்.

The Progressive Printers, Madras.

7B P31 N34

170495